SUPPLEMENT TO THE "CATHCLIC GUARDIAN

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 26-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு ஆடி மாசம் 7-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## யேசுவின் திருஇருதய நேசம்

(முன் தொடர்ச்சி)

இத்தகைய மகத்துவம் பொருந்திய தனிமுதற்கடவுள், எவருமறியாத பரம ஏழையாகப் பிறந்து, குளிரிலும் வெயிலிலும் வேதனைப்பட்டு, சிசுவாயிருக்கும்போதே தமது திருஇரத்தத்தைச் சிந்தி, இரண்டு வயது ஆகுமுன்னரே ஏரோது அரசனுக்குப்பயந்து உற்றார் உறவினரைத் துறந்து ஊரைவிட்டு ஊர்ஓடி உயிர்வாழ்வதற்குக் காரணமென்ன? யேசுநாதருக்கு நீசமனுஷர்களாகிய நமது மட்டிலிருந்த சிநேகப்பெருக்கமே காரணம். தமது சிருஷ்டிகளாகிய யாதா பிதாவுக்கு முபபது வருஷகாலம் பணிந்து நடக்கிறார்; மூன்று வருஷம் ஊர் ஊராய்ச்சுற்றித்திரிந்து ஆயிரக்கணக்கான அற்புதங்களைச் செய்கிறார்; அவரது தெய்வீக வல்லமையினால் குருடர் பார்க்கிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், முடவர் எழுந்து நடக்கிறார்கள், குஷ்டரோகிகள்குணமடைகிறார்கள், பேய்பிடித்தவர்கள் அந்த நரக அலகையின் நிஷ்டூரத்தினின்று மீட்கப்படுகிறார்கள், இறந்தவர்கள் உயிர்க்கிறார்கள், அலையும் புசலும் அவர் வார்த்தைக்கிணங்கி அமர்ந்து நிற்கின்றன, பசியுாயிருக்கிறவர்கள் திருப்தியடைகிறார்கள். இவ்வரும்பெரும் அற்புதங்களைச் செய்து நிர்ப்பாக்கிய மானிட சென்மத்துக்கு அளவற்ற உபகாரம்புரிய அவரை ஏவித்தூண்டியது எது? சிநேகம் நிறைந்த அவரது திருஇருதயமே. தமது சீஷர்களின் புத்திக்குறைவையும், சத்துராதிகளின்சதிதுரோகத்தையும், தம்மிடம் உபகாரம் பெற்றவர்களின் நன்றி கெட்டதனத்தையும் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ள அவருக்குத் தைரியமளித்தது எது? நமது மட்டில் அவருக்குள்ள அணை கடந்த அன்பே. ஒரு சீஷன் அவரைக் காட்டிக்கொடுக்கவும், மறுசீஷன் அவரை மறுதலிக்கவும், மற்றச்சீஷர்கள் துன்பகாலத்தில் அவரைக் கைநெகிழ்ந்து ஓடவும், கொடிய யூதர் அவரைக் கயிறுகளினால் கட்டித் தெருக்களில் பெரும் பாதகனைப்போல் இழுத்துச்செல்லவும், கற்றூணில்கட்டிக் கசையினால் அடிக்கவும் கூர்மையான முட்கள் நிறைந்த முடியை அவர்சிரசில் வைத்து அழுத்தவும், பரிகாசஇராசாவாக, பட்டணப்பிரவேசம நடத்தவும், பாருச்சிலுவையைத் தோளில் சுமத்தவும் கடைசியாகக் கல்வாரிமலையில் சிலுவையிலறைந்து கொல்லவும் தம்மைத்தாமே அவர் கையளித்ததற்குக் காரணமென்ன? அவரது தெய்வீக இருதயத்தில் சுவாலைவிட்டெரிந்த திருச்சிநேகமே.

தமது திருச்சிநேகத்தின் இவ்வளவு அரிய அத்தாட்சி போதாதென்றாற்போல், தமது அப்போஸ்தலர்களை அநாதப்பிள்ளைகளாய் விட்டுப்போகாமல் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி உற்சாகமளிக்க திவ்விய இஸ்பிரீத்து சாந்துவை அனுப்பவும், திருச்சபையை ஸ்தாபிக்கவும், தம்மையே நமது அநுதின ஆகாரமாக அளிக்கவும், தமது பரிசுத்த மாதாவை நமது பட்சமுள்ள தாயாகக் கொடுக்கவும், மனுக்குல முழுவதையும் இரட்சித்து மோட்சபாக்கியத்துக்கு நம்மைச் சுதந்தரவாளராக்கவும் செய்தது எது? திவ்விய இருதயத்தின் திருச்சிநேகமே. இவ்வளவு செய்தவர் நம்மைப்பார்த்து, "நான் செய்யக்கூடியது எதைச் செய்யாமல் விட்டேன், சொல்லுங்கள் பார்ப்போம்" என்று வியாகுலத்துடன் கேட்பதுநியாயமல்லவா? நமது நல்ல ஆண்டவர் அர்ச். மார்கரீத் மரியம்மாளை நோக்கி: "மனிதரை அத்தியந்த விதமாய் நேசித்து, தனக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்ளாமல் தன்னைமுழுதும் பரித்தியாகம்செய்த இருதயத்தைப் பார்" என்று அன்புடன் வசனிக்கிறார்.

திவ்விய யேசுவின் திருஇருதயம் ஏழைகள் தனவந்தர், பெரியோர் சிறியோர், பரிசுத்தர் பாவிகள், கிறீஸ்தவர்கள் அஞ்ஞானிகள் முதலான உலகிலுள்ளசகலசாதி சனங்களையும் சகல வகுப்பாரையும் ஒன்றாய்க் கூட்டித் தனது நேசப்பெருக்கத்தால் இறுகக்கட்டி தயாபரிக்கும் தயாளமுள்ள இருதயம். இத்தகைய இருதயத்துக்கு என்ன கைம்மாறு அளித்திருக்கிறோம்? "இதுவரையிலும் என் அன்பரின் இருதயத்துக்கு நான் என்ன செய்துவந்திருக்கிறேன்? இப்போது என்ன செய்துவருகிறேன்? இனி நான் என்ன செய்யவேண்டும்?"—என்று இதை வாசிக்கும் நண்பர் ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேட்கவேண்டும்.

யேசுவின் திருஇருதயத்தை ஆராதித்து அத்தேவ இருதயத்துக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதே நாம் அவருக்குச்செய்யவேண்டியபிரதிநன்றி. இந்நன்றியானது வெறும்வார்த்தையோடு நின்றுவிடாமல் கிரிகைகளில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கவேண்டும். நமது தேவ இரட்சகர் நமக்கு முன்மாதிரிகையல்லவா? முன்மாதிரிகையென்றால், அவர்எவ்வாறு தமது பரமபிதாவை நேசித்தாரோ அவ்வாறே நாமும் நேசிக்க வேண்டும். இதனால்தான்: "எல்லாவற்றிற்குமுன்பாக உன் சர்வேசுரனை உன்முழுமனதோடும், முழு இருதயத்தோடும், முழுச்சத்துவத்தோடும் சிநேகிக்க வேணும்" என்று கற்பித்தருளினார். சர்வேசுரனை சிநேகிப்பவர்கள் ஒருபோதும் அவரது கட்டளைகளை மீறமாட்டார்கள். அவரது தேவ மகிமைக்குப்பங்கம் வருவிக்கும் எவ்வித விஷயத்தையும் செய்யத் துணியார்கள். அவரைமறுதலிப்பதைவிடத் தங்கள் உயிரையே இழக்கத் தயாராயிருப்பார்கள். தேவசிநேகமுள்ள இருதயத்தில் நமது ஆண்டவரின் திருஇருதயம் அரசாட்சி செய்யும். தமது திருஇருதயத்துக்குப் பிரியமான காரியங்கள் எவையென்று நமது இரட்சகர் தமது நேசபத்தினியாகியதிருச்சபை வழியாய்க் காண்பித்திருக்கிறார்.

## சுப்பிரமணியம் சூசைதாசன் ஆகினான்

### மனந்திரும்பிய இளைஞனின் உண்மை வரலாறு

ஒருநாள் அழகான ஒரு தேவாலயத்தின் முகப்பு வாசலின் முன், தமிழ் நாட்டுச் சிறுவன் ஒருவன், வணக்கமாய்க் கைகட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தான். அவனது கண்கள் அடிக்கடி கோவிலின் பீடத்துக்குப் பக்கத்தில் அழகாக அமைக்கப்பட்டு பசிய இலைகள் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு, தீபங்களால் ஒளிவிட்டொளிர்ந்துகொண்டிருந்த செயற்கைக் குகையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. கோவிலுக்குள் போகலாமா, அல்லது வீட்டுக்குப் போகலாமா என்ற யோசனையில் இருப்பவன் போலத் தோற்றினான். அவன் முகக் குறியும், நின்ற நிலையும் அச் சிறுவன் ஒரு கிறீஸ்துவப் பையன் அல்ல—ஒரு இந்துப் பையன் என்பதைக் காட்டின.

ஆம், அவன் கிறீஸ்துவன் அல்ல. நமது நாட்டில் நம்மைச் சுற்றியிருக்கும் அநேக பிறசமயிகளைப் போலவே, இச் சிறுவனுக்கும் மனித இரட்சிப்புக்காக மனுவுருவெடுத்த ஆண்டவரது நாமம் முதலாய்த் தெரியாது. அன்று அவன் கோவில் வாசலில் நின்ற நாள் ஆண்டவர் பிறந்த நத்தார் திருநாள் என்றும் அவன் அறியான்.

இவ்வாறு நின்ற சிறுவனது பெயர் சுப்பிரமணியன். சுப்பிரமணியன் இவ்விதம் கோவில் வாசலில் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கும்பொழுது, பட்டுடை தரித்து, விலையுயர்ந்த பொன்னாபரணங்களை அணிந்த சீமாட்டி ஒருத்தி கோவிலைவிட்டு வெளிவருவதைக் கண்டு, மரியாதையாகச் சற்று ஒதுங்கி விலகி நின்றான். அம்மாது சிரோன்மணி கையிலிருந்த செபமாலையைத் தன் கைப்பையுள் போடுவதற்காக அவ்விடத்தில் சற்று தரித்து நின்றாள். அச் சமயம் பளிச்சென்று ஏதோ ஒரு பொருள் அவளுடைய பையினின்றும் தவறி விழுவதைச் சுப்பிரமணியன் கண்டான். சீமாட்டி அதைக் கவனியாது நடந்துசெல்வதைக் கண்ட சிறுவன் விரைந்துபோய், விழுந்தது ஒரு அரைரூபா நாணயம் எனக் கண்டு, அதை எடுத்துக் கொண்டு ஓடிப்போய், அந்தச் சீமாட்டியின் முன் நீட்டி: "அம்மா, நீங்கள் இதைக் கோவில் முகப்பிலே போட்டுவிட்டீர்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாச்சாரம்

### அர்ச். சவேரியாரின் வலதுகரம்

சமீபத்தில் யப்பானில் நடைபெற்ற அர்ச். சவேரியாரின் நான்காவது நூற்ருண்டு விழாவுக்கு ஸ்பெயினிலிருந்து சென்ற 34 திருயாத்திரிகர்களின் ஒரு பகுதி அவ்வர்ச்சியசிஷ்டரின் திருவுடலைத் தரிசிக்கக் கோவைநகருக்குச் செல்லுவதற்காக சென்றமாதம் 18-ந் திகதி ஆகாயவிமானமூலம் கல்கத்தாவிலிருந்து பம்பாய் வந்திறங்கியது. யப்பானுக்கு எடுத்துச் செல்லப்பட்ட அர்ச். சவேரியாரின் வலதுகரம் ஆடி அல்லது ஆவணி மாதத்தில் பம்பாய்க்குக் கொண்டுவரப்படும் என்றும், பின் அங்கிருந்து ஸ்பெயினுக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவித்தனர். யப்பானில் தற்போது 75,000 கத்தோலிக்கர் வசிக்கின்றனர் என்று இந்த ஸ்பானிய திருயாத்திரிகர் தெரிவித்தனர்.

### ஆபிரிக்க கத்தோலிக்க அரசர்

பெல்ஜியகொங்கோவில் ரூவாண்டா எனும் நாட்டின் அரசராகிய முத்தாராருதாஹிகாவா என்பவரின் உறுதியான விசுவாசத்தையும் தெய்வபக்தியையுங்கண்டு பெல்ஜிய மக்கள் வியப்புற்றனர். இவர் ஏழு அடி உயரமும் மெல்லிய திரேகமுமுடையவராகக் காணப்படுகிருர். இவர் ஆறு வருடங்களுக்குமுன் தமது 33-வது வயதில் கிறீஸ்தவரானுர். ஞானஸ்நானம் பெறுவதற்குமுன் பலதாரமணத்தைப் பகிரங்கமாக மறுத்தார். பல மனைவிகளை மணந்துகொள்ளுவது சர்வசாதாரணமாயிருந்துவரும் அந்தநாட்டில், அம்மன்னர் இவ்வாறு நடந்துகொண்டது அவருடைய அரிய மனேதிடத்தைக் காட்டுகிறது. அவருடைய மனைவிக்கு மக்கட்பேறு இல்லை. இன்னொரு பெண்ணை மணந்துகொள்ளாவிடில் தமக்கு வம்சவழி இல்லாதுபோய்விடும் என்பதை அறிந்திருந்தும் அவர் இவ்வாறு உறுதியுடன் நடந்துகொள்ளுவது கிறீஸ்தவரல்லாத ஆபிரிக்கர்களுக்குப் பெரிதும் ஆச்சரியத்தை விளைத்துள்ளது. அந்நாட்டுக்குச் சென்ற ஐம்பது வருடங்களுக்குமுன்தான் முதன்முதல் கிறீஸ்தவ குருக்கள் வேதம் போதிக்கச் சென்றனர். தற்போது அந்நாட்டில் 81 சுதேசகுருக்கள் இருக்கின்றனர்.

### கத்தோலிக்கரின் வெற்றி

சமீபத்தில் பெல்ஜியதேசத்தில் நடந்த பொதுத்தேர்தலில் மேல்சபையிலும் கீழ்ச்சபையிலும் 'கிறிஸ்தியன் சோஷலிஸ்ற்' கட்சியினர் பெருந்தொகையான சீட்டுகள் பெற்றுள்ளனர். இந்தக்கட்சியினரே லேயோப்போல்ட் மன்னர் மீண்டும் அரசியல் நிர்வாகத் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோருபவர்கள். இக்கட்சியிலிருப்பவர்களுள் 99 சதவிகிதமானவர்கள் கத்தோலிக்கரேயாவர். அத்தேச சட்டப்படி இப்பொதுத்தேர்தல்முடிந்தவுடன், கடந்த இருவருடங்களாக நிர்வாகம்புரிந்துவந்த திரு. பவுல் என்றிஸ்பாக்கின் கலப்பு மந்திரிசபை சென்ற ஆனிமாதம் 27-ந்திகதி கலைக்கப்பட்டது.

### புற்றுநோய் ஆராய்ச்சி

வத்திக்கான் விஞ்ஞான சாஸ்திரிகள் கழகத்தின் முயற்சியால் சமீபத்தில் நடைபெற்ற புற்றுநோய் ஆராய்ச்சி நிபுணர்கள் மகாநாட்டில் உலகின் மிகத்தேர்ந்த டக்டர்மார் பதினுலுபேர் கலந்துகொண்டனர். மகாநாட்டின் செலவுமுழுவதையும் பரிசுத்ததந்தையவர்களே தமது சொந்தச்செலவில் ஏற்றுக்கொண்டனர். ஆனிமாதம் 7-ந் திகதி பரிசுத்ததந்தையின் டக்டரான புரொபசர் றிக்கார்டோ லிஸி அவர்கள் மகாநாட்டிற்குச் சமுகமளித்தநிபுணர்களைப் பரிசுத்ததந்தைக்கு அறிமுகம் செய்துவைத்தார். பிரித்தானியிலிருந்து வந்த மூன்று பிரதிநிதிகளுள் ஒருவர் லண்டன் மாநகர்ச் சர்வகலாசாலையின் இரசாயனசாஸ்திர போராசிரியர். மற்றொருவர் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையின் போராசிரியர். இன்னொருவர் கிளாஸ்கோவிலுள்ள புற்றுநோய்வைத்தியசாலையின் பிரதமடக்டர். இம்மகாநாடு இருவாரங்களாக நடைபெற்றது.

## வங்காலைக் கடிதம்

### ஒற்றுமை நிறைந்த வங்காலை வாலிபர்

சென்ற ஆனிமாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வங்காலை ஆண்பாடசாலையில் வங்காலை வாலிப மூப்பர் ஒருவரைத் தெரிவு செய்யும் பொருட்டு ஓர் பகிரங்கக் கூட்டம் கூடப்பட்டது. இதற்கு வங்காலைக் கட்டளைச் சுவாமியாரும், ஊர்க்கட்டளை காரர் மூவரும், பாடசாலைத் தலைமை ஆசிரியரும், வங்காலையிலுள்ள பெரும்பகுதி வாலிபரும், மற்றும் பெரியோரும் சமுகமளித்தனர். கூட்டம் செபத்துடன் ஆரம்பமானது. கட்டளைக் காரர் பேரால் திரு. த. ஆரோக்கியம் குலாஸ் என்பவர் "ஒற்றுமை" என்பதையிட்டு ஓர் சொற்பொழிவு ஆற்றினர். பின்னர் வாலிபர் யாபேரும் தங்கள் மூப்பரை ஒற்றுமையுடன் தெரிவு செய்வதாக ஒப்புக்கொண்டனர். திரு. அ. கியோமர் சோசை என்பவர் எழுந்து, திரு. ச. பங்கிராஸ் லேனு என்பவரை வாலிப மூப்பராகத் தெரிவு செய்யும் பிரேரணையைக் கொண்டுவந்தார். திரு. A. R. வால்டர் குரூஸ் அதை ஆமோதிக்க, சகல வாலிபரும் ஒற்றுமையுடன் திரு. பங்கிராஸ் லேனுவையே தங்கள் மூப்பராகத் தெரிந்து கொண்டனர். உடனே கோவில் மணிகள் ஒலிக்க, சீனவெடிகள் அதிர, திரு. ச. பங்கிராஸ் லேனு என்பவர் புதிய வாலிப மூப்பராகத் தெரிவ செய்யப்பெற்ருர் என்ற செய்தி பிரசித்தப் படுத்தப்பட்டது. பின்னர் தலைமை ஆசிரியரால் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அதற்குப் புதிய மூப்பர் தமது நன்றி தெரிவித்தார். பின்னர், மூப்பருக்கு மாலை சூட்டப்பட்டு, ஊர்வலமாக அவர் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிற்றுண்டி உபசாரணை அளிக்கப்பட்டது. பின்னர் மூப்பரால் வந்தன உபசாரம் சொல்லப்பட்டது. இந்த நிகழ்ச்சி வங்காலை வாலிபரின் ஒற்றுமையைக் காட்டுவதாயிருந்தது. இவ்வித ஒற்றுமை எந்நாளும் எம்வாலிபரில் நிலை கொள்ள வேண்டுமென்று திரு இருதயநாதரை வேண்டி நிற்கிறேன்.

கண்டு மகிழ்ந்தோன்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நேயர்களுக்குத் தயவாய் எழுதிக்கொள்ளும் செய்தியாதெனில்: என்னுடைய மகனுக்கு உண்டான தொய்வுநோய், சிறுகுழந்தையில் இருந்து ஐந்துவயது மட்டாக வேதனையைக்கொடுத்துக் கொண்டு வந்தது. செய்யாத வைத்தியம் எல்லாம் செய்தும், மாருமல் யேசுவின் திருஇருதயத்துக்கு நேர்ந்ததின் பின் நற்சுகம் கிடைத்தது. இப்போது என்மகனுக்கு வயது 12. இவ்வளவுகாலமாக நான் இதைப்பிரசுரிக்காததையிட்டுத் திருஇருதயத் தூதனிடம் பொறுதிகேட்கிறேன். இருதயத்தூதன் இல்லாதபடியால்சத்திய வேத பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரப்படுத்தும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

P. J. மரியநாயகம்

—யேசுசபையைச்சேர்ந்த அதிவண. எட்வின் பின்ரே சுவாமிகள் ஆமதாபாத் மேற்றிராணியாராக நியமிக்கப் பெற்றுள்ளார். இவர் 1901-ம் ஆண்டில் காராச்சியில் பிறந்தவர்.

## மன்னார் வாடிவீட்டில் மந்திரி ஜி. ஜி.

(மன்னூர்க் கடிதம்)

(மந்திரி ஜி. ஜி. அவர்கள் கேட்டுக் கொண்டபடி) 11. 6. 49 மாலை 9 மணிபோல் பட்டினசபை அங்கத்தினர் டானியல்றேச்சின் தலைமையில் பள்ளிமுனை வாசிகள் மூவரும், நகரசபை அங்கத்தினர் செபஸ்தியான் குரூஸ் தலைமையிற் பனங்கட்டிக் கொட்டுவாசி ஒருவரும், விதானையார் சுவக்கீன் தியேஸ் தலைமையில் தாழ்வுபாட்டு வாசிகளிருவரும் மன்னூர் வாடிவீட்டில் மந்திரியாரைச் சந்தித்தனர். மந்திரி அவர்கள் பேசாலை, தலைமன்னூர் முதலிய இடங்களுக்குச்சென்று களையோடு வந்திருந்தாலும் காரியத்தை விசாரிக்கப் பின்னிற்கவில்லை.

முதலில் செபஸ்தியான் குரூசின் விசாரணையில் தென்கடலில் கரவலைப்பாடு ஒன்று உண்டென்றும் வடகடலிலும் பாடு தரவேண்டுமென்றும் கேட்டனர். டானியல் றேச்சும் தென்கடலில் ஒருபாடு உண்டென்றும் தங்களுக்கு வடகடலிலும் பாடு வேண்டுமென்றும் இலுப்பைக்கடவைப் பக்கத்தில் தங்கள் தொழிலாளருக்கு யாழ்ப்பாண வாசிகள் சிலராலும் இந்தியத் தொழிலாளர் சிலராலும் வசதியீனங்களுண்டென்றும், நச்சுவலையென்ற ஓர்வலையால் தாங்கள் தொழில் செய்யவே முடிவதில்லையென்றும் விளக்கிச் சுவக்கீன் தியேசும் தங்களுக்கும் தென்கடலில் மாத்திரம் பாடுகளுண்டு, வடகடலிலும் பாடுதேவையென்றும் கேட்டனர்.

வடகடலில் இந்தியத்தொழிலாளர் 15 வருடங்களுக்குமேல் 2, 3 பாடுகள் சொந்தமாக வைத்திருக்கின்றனர் என்று அறிந்த மந்திரிஅவர்கள் நமது மக்கள்—மன்னூர்மக்கள் மன்னூரிலே தொழில்செய்யமுடியாமல் மற்றவர்கள் தடையாய்நிற்பது முறையல்லவென்றும் முதன்முதல் உங்களுடையது உங்களுக்குரியது ஆதலால் அவர்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு ஒவ்வோர் பாடுகள் கொடுக்கலாமென்றும் தீர்த்ததோடு அங்குசென்றவர்களும் திருப்தியடைந்தனர்.

பின் மன்னூர்ப் பகுதியில் ஓர் 'ஐஸ் மோள்' வைக்கவேண்டியிருப்பதால் எவ்விடத்தில் நிறுவுவது வசதிஎன்பதும் ஆலோசிக்கப்பட்டபோது, நல்ல தண்ணீர் பெறக்கூடிய இடமும் இப்பகுதியில் கூடியமீன்பிடித்து, அதிகமான ஐஸ்மீன் அனுப்பும் இடமுந்தான் நாம் கவனிக்கவேண்டுமென்று பேசப்பட்டபோது, இதற்குத்தகுதியான இடம் பேசாலையென்றும்—இப்போது தோட்டவெளியில் கட்டிடம் நிறுவமுயற்சிநடப்பது அவ்வளவுஉசிதமல்லவென்றும் அதை உடனே நிறுத்திவிடுவதாகவும், ஓரிடத்திலிருந்தாலும் இன்னோர் அவசியமான இடத்தில் ஐஸ்பாதுகாப்பு அறைமூலம் தேவையான ஐஸ்கொடுக்கலாமென்றும் மந்திரிகூறினர். ஒருவர் குறுக்கிட்டுக் கூடுதலான மீன்பிடித்து ஐஸ்போடும் ஒருஊரிலும்பார்க்கக் கிட்டியிற் பலஊர்களிருந்து மீன்பிடித்து ஐஸ்போடுவது கூடுதலாயிருக்கக்கூடுமானால் அவ்விடத்தில் ஐஸ்மோள் நிறுவுவது நல்லதல்லவா என்றூர். எப்படிப்பார்த்தாலும் பேசாலைதான் கூடுதலாகமீன் அனுப்புவதாகவும் அங்கே ஓர் இந்தியரால் பலவருடங்களாக வைத்து நடத்திவரும் திருப்தியற்ற வேலைசெய்யும் ஐஸ்மோளை எடுக்கச் செய்வதோடு அதைவிட மலிவாக அரசாங்கம் ஐஸ்கொடுக்க முடியுமென்றும் மந்திரியார்கூறினர்.

வேறொருவர் குறுக்கிட்டுப் பேசாலையிலுள்ள ஐஸ்மோளை அரசாங்கம் விலைக்கு எடுத்துவேண்டிய திருத்தம் செய்வதால் இருபாலார்க்கும் நலனுண்டாகுமென்றும் இன்னோர்ஐஸ்மோளை மன்னூரை அடுத்துநிறுவது உசிதமென்றும்கூறியபோது மந்திரியார் அவ்யோசனையையும் வரவேற்றூர். தோட்டவெளி ஐஸ்மோள் நிலையம் நிற்பாட்டப்பட்டால்அவ்விடத்திலுள்ள மீன்பிடித்தொழிலாளர் (முஸ்லீம்கள்) மந்திரியைக் குறைகூறக்கூடுமென்றும் ஓர் பிரச்சினை எழுந்தது. மந்திரியார் இப்படியான அபாண்டங்களுக்கு நான் எப்படித் தப்பிக்கொள்ளமுடியும். நான் ஓர்வித விருப்பு வெறுப்புக்கொண்டு இவைகளைச் செய்யவில்லை. அவ்விடத்துத்தண்ணீர் நல்லதாயில்லாததோடு மீன் ஐஸ்போடுவது அவ்விடத்தில்மிகக் குறைவாயிருப்பதுந்தான் காரணங்கள். இதைக்கவனிக்காமல் முதலில் வேலையைத்தொடங்கியதுதான் பெரிய பிழையாய்விட்டதென்று வருந்தினூர். $10\frac{1}{2}$ மணிபோல் கூட்டம்முடிந்தது.

## இஸ்பிரீத். திரு. பின்வரும் 5-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 5: 20—24)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களைநோக்கித் திருவுளம்பற்றினதாவது: வேதபாரகரும், பரிசேயரும் கொண்டிருக்கிற பரிசுத்ததனத்தைப் பார்க்கிலும் உங்கள் பரிசுத்ததனம் அதிகமாயிராவிட்டால், பரலோக இராச்சியத்திற்குட் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். கொலை செய்யாதிருப்பாயாக; கொலை செய்பவனே வென்றூல் நியாயத் தீர்ப்புக்குப் பாத்திரவானுயிருப்பானென்று முன்னோர்களுக்குச் சொல்லப்பட்டதாகக் கேட்டிருக்கிறீர்களே. ஆனல், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: தன் சகோதரனைக் கோபிக்கிற எவனும் நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரவானுகவும், தன்சகோதரனை ராக்கா (மூடன்) என்பவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்குப் பாத்திரவானுகவும், பைத்தியனே என்று சொல்பவன் நரகாக்கினிக்குப் பாத்திரவானுகவும் இருப்பான். ஆதலால், நீ பலிபீடத் தண்டையில் உன் காணிக்கையைச் செலுத்தும்போது, உன் சகோதரன் உன்மேல் ஏதோ மனத்தாங்கல் கொண்டிருக்கிறுனென்று அங்கே நினைத்துக் கொள்வாயேயாகில், அவ்விடத்தில் பலிபீடத்துக்கு முன்பாக உன்காணிக்கையை வைத்துவிட்டு முந்தஉன் சகோதரனேடு உறவாடப்போ; பின்பு வந்து உன்காணிக்கையைச் செலுத்துவாய் என்றூர். கிறீஸ்துவே, உமக்குப் புகழ்உண்டாவதாக.

**யோசனை:** இன்றையஆராதனை முறை நாம் ஒருவரோடொருவர் பிறர் சிநேகத்தினுல் ஐக்கியமாக இருக்கவேண்டுமென்ற மேலான கருத்தைக்கொண்டுள்ளது. இதுவே கடவுளின் உண்மையான மக்களுக்கு உரியதும், அவர்கள் கடவுள்மேல் கொண்டுள்ளசிநேகத்தை எண்பிக்கவல்லதுமாகும். முதற்கற்பனையைப் போலவே இரண்டாவது கற்பனையும் தேவசிநேகமும் பிறர்சிநேகமும் ஒன்ருக இணைக்கப்பட்டுள்ளன. கடவுளை மேலாக நேசித்து, மற்றனைவரையும் அவருக்காக நேசிப்பது—இதுதான் சிநேகத்தின்போதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயப் பத்திரிகைகளும் நாமும்

## நாமே பத்திரிகையின் சீவநாடி

"தர்மத்தில் சிறந்த தர்மம் பத்திரிகா தர்மம்" என்றொரு சுலோகமும் உண்டு. இந்தச் சுலோகத்தைப் பார்த்ததனால்—அல்லது படித்ததனால்—மாத்திரம் நாம் திருப்தியடைந்துவிடமுடியாது. பொதுவாக அந்தத் தர்ம கைங்கரியம் முன்னேற்றமடையவும், தியாகம் தழைத்தோங்கவும், நம்போன்றவர்களின் ஆதரவுதான் ஒருபத்திரிகைக்கு அதிமுக்கியமாய்வேண்டும். நம் ஆதாவு பலப்பட்டால்தான் பத்திரிகை பலப்படும். ஒருபத்திரிகை பிரபல்யப்படுவதும்—புஷ்டியோடு திகழ்வதும்—செல்வாக்கைக்கொண்டு விளங்குவதும்—நம்மாலேதான். ஆகவே, "நாமில்லாமல் பத்திரிகையில்லை" யென்றுகூடக் கூறலாம்.

இன்று நம் கத்தோலிக்கர்களிற் பெரும்பாலோர் சமயத்திற்கு அப்பாற்பட்ட தினப்பத்திரிகைகளையும், வாரப் பத்திரிகைகளையும், மாதப்பத்திரிகைகளையும் படிப்பதில் ஆர்வமுடையவர்களாயிருக்கிறார்கள். உலக விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். ஒரு மனிதனுக்குப் பத்திரிகை ஆர்வம் இருக்கவேண்டியது அவசியந்தான். இதை நாம் மறுக்கவில்லை. ஆனால், கத்தோலிக்க சார்பில் நடைபெறும் ஒரு பத்திரிகையையும் ஒரு கத்தோலிக்கன் அவசியம் ஆதரித்தே ஆகவேண்டும். ஏனெனில் ஒரு கத்தோலிக்கப் பத்திரிகையானது பிரஸ்தாப சமயத்தவர்களுக்கு எவ்வளவோ மகத்தான சேவைகளைச் செய்கிறது. சமயத்தின் நல உரிமைகளுக்காக அயராது உழைத்துவருகின்றது. சமயப்பிரசாரம் செய்கிறது. கத்தோலிக்கர் சம்பந்தப்பட்ட சமாச்சாரங்களை உலகமெல்லாம் பரப்புகிறது. இத்தகைய பெருந் தியாகங்களைச் செய்துவரும் ஒரு கத்தோலிக்க பத்திரிகையை, கத்தோலிக்கர்களாகிய நாம் அன்போடு வரவேற்காதே போனால், வேறுயார் இந்தப் பத்திரிகைகளை வரவேற்பார்கள்.

இன்றுவரை கத்தோலிக்கர்கள்சார்பில் எவ்வளவோ பத்திரிகைகள்தோன்றின. அவைகளெல்லாம், ஒருசில மாதங்களில, ஒருசில வருஷங்களில் இருந்த இடமுந்தெரியாமல் மாயமாய் மறைந்துபோயின. இதற்கெல்லாம் காரணம் யார்? கத்தோலிக்கர்களாகிய நாமேதான். இதனால், "கத்தோலிக்க சமுதாயத்திற்கே ஒரு பெரிய நஷ்டத்தை ஈட்டியவர்கள்" என்ற அபவாதத்திற்கு இடம் ஏற்படலாயிற்று.

சமயத்திற்காக உயிரைத் தியாகஞ் செய்யாதேபோனாலும், அதற்காகச்சமயப்பத்திரிகைகளையாவது வாங்கிப்படிக்கக்கூடாதா? போஷிக்க இயலாதா? ஆதரிக்கமுடியாதா? சமயஆர்வம் எப்படிப்பட்டதோ, அதைப்போலவேதான் சமயப்பத்திரிகைகளிலும் ஆர்வம் இருக்கவேண்டும். நம் ஆதாவுதானே பத்திரிகைக்கு நவரசம்போன்றது. இதைக் கத்தோலிக்கர்களாகிய நாம் மறந்துபோகக்கூடாது.

பத்திரிகையே நம்போன்றோருக்கும் பரமதிருப்தியைக் கொடுப்பது. பத்திரிகையே கத்தோலிக்க சமூக பலத்தைப் பெருக்குவது. பத்திரிகையே சமய ஆர்வத்தைக் கிளறிவிடுவது. பத்திரிகையே பிறசமயத்தவர்களுக்குப் பாடங் கற்பிப்பது. ஆகவே, இன்று நம் கத்தோலிக்கர்களின் சீவநாடியாய் விளங்குவது என்ன? ஒரு கத்தோலிக்க பத்திரிகையல்லவா?

இன்று இலங்கையில் கத்தோலிக்கர்சார்பில் பல சங்கங்களும், சமாஜங்களும், சபைகளும் நடைபெற்றுவருகிறன. பிரஸ்தாப ஸ்தாபனங்கள் நம் கத்தோலிக்கப் பத்திரிகைகள் சம்பந்தமாய்ச் சிரத்தை எடுத்துக்கொள்வதாக எமக்குத் தெரியவில்லை. கத்தோலிக்க பத்திரிகைகள் விஷயமாய் இந்த ஸ்தாபனங்கள் ஓரளவு கவனஞ்செலுத்தினால், அதன் பலத்திற்கும், வளர்ச்சிக்கும் பக்கத்துணையாயிருக்குமென்று நம்புகிறோம்.

ஒவ்வொருஸ்தாபனங்களும், தத்தம் அங்கத்தவர்களுக்கு நம் கத்தோலிக்க பத்திரிகைகளை நினைப்பூட்டவேண்டும். கத்தோலிக்க சமாச்சாரங்களைப் படிக்க அவர்களைத் தூண்டவேண்டும். அவர்களை ஒரு கத்தோலிக்கப் பத்திரிகாபிமானிகளாய் ஆக்கவேண்டும். இப்படியெல்லாம் ஒவ்வொரு ஸ்தாபனங்களும் நம் சமயப் பத்திரிகை விஷயமாய்க் கவனஞ்செலுத்தினால், நமக்கும் கத்தோலிக்கப் பத்திரிகைகளுக்கும் பெரிதும் நன்மை பயக்குமென்று நினைக்கிறோம். ஒரு ஸ்தாபனத்தில் அங்கம் வகிப்பவர்கள் எல்லோருமே எழுத்துவாசினைதெரிந்தவர்களாயிருக்க மாட்டார்கள் என்பதையும் நாம் அறிவோம். அப்படிப்பட்ட இயல்புடையவர்கள் தம் குடும்பத்திலுள்ளவர்களுக்கேனும், தனது பெண்டு, பிள்ளைகளுக்கேனும் பிரஸ்தாபப் பத்திரிகைகளை வாங்கிக்கொடுத்துப் படிக்கச் செய்து பயன்பெறலாம். இந்தத் திட்டம் ஆரம்பத்தில் ஒரு ஸ்தாபனத்திற்கு சிரமமாகத் தோன்றக்கூடும். நாள் ஆக அவைகளெல்லாம் வெகுசுலபம் போல் ஆகிவிடும். இந்த மேலான கைங்கரியத்தில் ஸ்தாபனங்கள் சேவை செய்தால் உத்தமமாயிருக்குமென்று தோன்றுகிறது.

நீங்கள் உண்மையாகவே நம்புங்கள். ஒரு கத்தோலிக்கப் பத்திரிகையின் பலமே, நமது பலம்! ஒரு கத்தோலிக்கப்பத்திரிகையின் முன்னேற்றமே நமது முன்னேற்றம்! ஒரு கத்தோலிக்கப்பத்திரிகையின் லட்சியமே, சமய லட்சியம்! இவையெல்லாம் கத்தோலிக்கசமூகம் கவனத்திற்குக் கொண்டுவருமா? இனிமேலாகவாவது கத்தோலிக்கப்பத்திரிகைகளை ஆதரிப்பார்களா?

அ. பாவுல் பர்னந்து

# மன்னார்த் தமிழாசிரியர் சங்கம்

இச்சங்கமானது 25-6-49 காலை நல்லாயன் ஆண்பாடசாலையிற் தலைவர் திரு. டானியெல் ரேச் ஆசிரியரின் அக்கிராசனத்திற்கூடியது. பலஆசிரியர்கள் சமுகமளித்ததோடு, பகுதிவித்தியாதரிசி திரு. இராசசிங்கமவர்களும் சமுகமாயிருந்தனர். தலைவர் முன்னுரைக்குப்பின் காரியதரிசி திரு. ஏ. ஈ. குரூஸ் அவர்களாற் சென்றகூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. பின் பொக்கிஷதிபர் திரு. எம். செபஸ்தியாம்பிள்ளை அவர்களால் வரவுசெலவுக் கணக்குக் காட்டப்பட்டதோடு பலஆசிரியர் தம்சந்தாப்பணம் செலுத்துவதிற் பராகண்டிதம் காட்டுவதால் சங்கத்தின் பணநிலைமை மிகமோசமாயிருப்பதுவும் குறிப்பிடப்பட்டது. பின் அபிமானமுள்ள பல ஆசிரியர்கள் தங்கள் சந்தாப்பணங்களைக் கட்டிவிட்டனர் அதில் பெண் ஆசிரியைகள் சிலர் முன்னின்றதும் கவனிக்கத்தக்கதே.

ஆடிமாதம் 16-ந்தேதி மன்னார்ப் பட்டினத்திலே கல்வித்தினம் கொண்டாடப்படவேண்டுமென்றும், சகல ஆசிரியர்களும் அவ்விடம் சமுகமளித்துக் கொண்டாட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுமென்றும், 15-ந்தேதி விடுமுறை கேட்கப்படவேண்டுமென்றும் பேசப்பட்டபோது கல்வித்தினமா? ஆசிரியர்தினமா? என்றபிரச்னைஎழுந்து கல்வித்தினமே என்று தீர்மானிக்கப்பட்டாலும், ஆசிரியர்தினமாகவே அது இருக்கவேண்டுமென்றும் சிலர் அபிப்பிராயந் தெரிவித்தனர். வெள்ளை அறிக்கையைப்பற்றிய விபரங்கள் ஒன்றும் தெளிவின்றியிருப்பதால் அடுத்துக்கூடும் நிர்வாகசபை ஆராய்ந்து வேண்டியன செய்யவேண்டுமென்றும், புரட்டாசி 5, 6, 7-ம் தேதிகளில் விடுமுறைக்கழகம் நடத்தப்படவேண்டுமென்றும் அம்மாசத்தில்ஓர்சங்கீதவிழா நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (வித்தியாதரிசகரின் பிந்திய அறிவித்தற்படி ஆவணி 4, 5, 6-ந்தேதிகளில் விடுமுறைக்கழகம் நடைபெறுமாம்.

பின் வித்தியாதரிசி அவர்களால் பாடசாலைகளின் வேலைகள், உணவுகள் என்பவற்றில் ஏற்பட்டகுறைபாடுகள் எடுத்தியம்பப்பட்டதோடு,இப்பகுதியில் ஏறக்குறைய 23 பாடசாலைகளில் ஆங்கிலவகுப்புகள் நடைபெறுவதாகவும், அவ்வாசிரியர்கள், படிப்பித்தல் முறைகளைப்பற்றி அறியாதவர்களாயிருப்பதால் இரண்டு மூன்று ஆசிரியர்களைத் தவிர மற்றவர்களால் வீண்பணச் செலவல்லாமல் பயனொன்றுமில்லையென்றும், விடுமுறைக்கழகத்தின் போது அவர்களுக்கு ஓர்விசேஷபயிற்சி கொடுக்க எண்ணியிருப்பதாகவும்,பாடசாலைவேலைகள் வரவாமுன்னேற்றமடையவேண்டுமென்றும்,அதற்கேற்ற முயற்சியைத் தான்எடுப்பதற்கு ஆசிரியர் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கூறிமுடித்தபின் காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டதோடு கூட்டம்முடிவுற்றது.

"மன்னார் மணி"

# சிறுவர் செபப் பொக்ஷம்

'சிறுவர் செபப் பொக்ஷம்' என்னும் பெயர்கொண்ட இச்சிறிய செபப்புத்தகம் புதியபோதனமுறைகளை அடிப்படையாகக் கொண்ட ஆற்றல்மிக்க ஆசிரியர் ஒருவரால் புதிதாக வெளியிடப்பட்டுள்ளது. பலகுருப்பிரசாதிகளினால் பார்வையிடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதிவண. G. A. குருசாமிசுவாமி O. M. I. அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. பூசைச்செபங்கள், பாவசங்கீர்த்தன ஆயத்தம், தேவநற்கருணைச்சந்திப்பு முதலியன சிறுவர் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய இனியசெந்தமிழில் புதுக்கி அமைக்கப்பட்டுள்ளன. திவ்வியபூசைப்பலியின் பிரதான பாகங்களையும் திருஉடுமானங்களையும் விளக்கும் அழகிய சித்திரப் படங்கள் பொருத்தமான இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. சிறுவரின் நேசராகிய திவ்வியயேசுவின் படம் புத்தகத்தின் முகப்பை அலங்கரிக்கின்றது.

மூன்றும் நான்காம் ஐந்தாம் வகுப்பு ஞானோபதேசப் பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள செபங்கள், பிரார்த்தனைகள் யாவும் இதில் உண்டு. இன்னும் பாடற்பூசைவேளையிலும், தேவநற்கருணை ஆசீர்வாத வேளையிலும் பாடப்படும் இலத்தீன்பாடல்கள் இதன் பிற்பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதற்தேவநற்கருணைபெற்றஆரம்பபாடசாலை மாணவர்களுக்கு அவசியமான எல்லா அம்சங்களும் இச்சிறிய செபப்புத்தகத்தில் உள

இப்புத்தகத்தின் அழகிய வெளித்தோற்றமும் சித்திரசகிதமான இதன் உள்ளீடும் பாலர்களை மிகவும்கவர்ந்து, அவர்கள் இளமையிலிருந்தே செபப் பழக்கம் பெறுவதற்குத் தூண்டுகோல்களாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. இதன் விலை 45 சதம். அர்ச். பிலோமினா அச்சகத்தில் அச்சிடப்பட்டது. யாழ்ப்பாணம் சென் வின்சென்ற் டீபோல்சபை, சந்தியோகுமையோர் பங்கியினரால் பதிப்பிக்கப்பட்டது. சிறுவர்கள் ஒவ்வொருவரும் இவ்வரிய செபப்புத்தகத்தை வாங்கி உபயோகிக்கச்செய்வது பெரியோரின் கடமையாகும்.

சிறுவருக்கு மிகுஉபயோகமான இச் செபப்புத்தகத்தைஎல்லாப்பிள்ளைகளும் பெற்றுப் பாவிக்கும்படி ஏவுகிறோம்.

## பர்மிய அரிசி கிடைத்துவிட்டது

முன் ஏற்றுமதி செய்ய ஒப்புக்கொண்ட அரிசி முழுவதையும் பர்மா ஏற்றுமதி செய்ய முடியாமலிருப்பது இலங்கையைப் பாதிக்காதென உணவுப் பகுதியைச் சேர்ந்த ஓர் அதிகாரி கூறுகிறார். சர்வதேச அவசரகால உணவுச் சபையினால் பர்மாவிலிருந்து இலங்கைக்கு இவ்வருடத்தில் 2 லட்சத்து 80 ஆயிரம் தொன் அரிசி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் 1 லட்சத்து 85 ஆயிரம் தொன் ஏற்கெனவே இறக்குமதியாகிவிட்டது. வேறு 18 ஆயிரம் தொன் அரிசி இலங்கைக்காகக் கப்பலில் ஏற்றப்படுகிறது. இதனால் இன்னும் 77 ஆயிரம் தொன் அரிசியே பாக்கியாகவிருக்கிறது. பின் அரை வருடத்திற்கு ஏற்றுமதி செய்வதற்காக $2\frac{1}{2}$ லட்சம் தொன் அரிசியே பர்மாவிடமிருப்பதாகக் கூறப்படுகிறது. இத்தொகையிலிருந்து இலங்கைக்கு 77 ஆயிரம் தொன் அரிசி கட்டாயம் கிடைக்குமென உணவு அதிகாரிகள் கூறுகின்றனர்.

உணவுத் தட்டுப்பாடுள்ள நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் அரிசி அளவில் குறைக்கவேண்டிய அவசியமேற்படின் அரிசியை முக்கிய உணவாகப் பாவிக்காத ஐரோப்பிய நாடுகளுக்கே அரிசி ஏற்றுமதி குறைக்கப்படும். தற்சமயம் பர்மாவிலேற்பட்டுள்ள தொழிலாளர் குழப்பங்களினால் உற்பத்திச் செலவு அதிகரித்துவிட்டது. இதை உத்தேசித்து அரிசிக்குக் கூடிய விலை கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பர்மா மனுச் செய்யும்.

# முள்ளிக்குளம் அர்ச். சூசையப்பர்வாசிகசாலை திறப்பு விழா

சென்றமாசம் 24-ந்திகதி காலை பதினொரு மணி அளவில் மன்னார் அரசாட்சி உதவி ஏசண்டுத்துரை ஸ்ரீமான் ஆர்னல்டா அவர்கள் முசலி கருமாதிகாரி அவர்களுடன் முள்ளிக்குளத்துக்குச் சமுகமளித்து அங்கு அழகாக அமைக்கப்பட்டிருந்த அர்ச். சூசையப்பர் வாசிகசாலையைத் திறந்துவைத்தார். அவ்வமயம் ம. அந்திரைத் தீயேஸ், ம. அந்தோனி லேன என்பவர்களால் அவர்களுக்கு மலர்மாலைகள் சூட்டப்பட்டன. பள்ளிக்கூடச் சிறார்கள் தேனினுமினிய இசையோடு வந்தனோபசார வாழ்த்துப்பாக்கள் பாடினர். முள்ளிக்குளம் அரசாட்சி வைத்தியர் திரு. K. கணபதிப்பிள்ளை அவர்களால் ஆங்கில மொழியில் வாழ்த்துப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. திரு. எஸ். பிரான்சீஸ் குரூஸ் என்பவர் வாசிகசாலையின் உபயோகம்பற்றியும் இவ்வூரின் அவசிய தேவைகளைப்பற்றியும் அரியதோர் உபந்நியாசஞ்செய்து நன்றித்துதி கூறிநின்றார்.

ஏசண்டுத்துரை அவர்கள் வாசிகசாலையைப் புகழ்ந்து பேசி, இது மாதோட்ட—முசலிப்பகுதிக்குள் முதன்மையான இடத்தை வகிக்கிறதென்று சொல்லி, ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றியும் கிராமத்தின் முன்னேற்றத்தைப்பற்றியும் வற்புறுத்திச்சொல்லி இவ்வூருக்கு [illegible] தலைவியான மொடாகாம [illegible] தன்னால் கூடிய கெதியில் கட்டிமுடித்துத் தருவதாகவும் உறுதிகூறினார். முசலி கருமாதிகாரி அவர்களும் வாசிகசாலையைப் புகழ்ந்துபேசித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து நின்றார். பின்னர் 'கிராம முன்னேற்றச் சங்கம்', 'சமுகசேவா சங்கம்', 'மாதர் சங்கம்' ஆகிய மூன்றுசங்கங்களும் ஏசண்டுத்துரை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டன. ஈற்றில் சிற்றுண்டி விருந்தளிக்கப்பட்டு புகைப்படம் பிடிக்கப்பட்டதோடு வாசிகசாலைத் திறப்புவிழா இனிதே முடிவெய்தியது.

S. M. Dias

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்ப்பகுதி

### கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

வட்டார வித்தியாதரிசியவர்கள் விடுமுறை காலக்கழகம் ஒன்று மன்னார்ப் பகுதி ஆசிரியர்களுக்கு வருகிற ஆவணி மாதம் 4-ந்திகதி தொடக்கம் 6-ந்திகதி ஈறாக நடாத்தவிருக்கிறார்—எல்லா ஆசிரியர்களும் இதில் பங்குபற்றும்படியும் வித்தியாதரிசியவர்களோடு ஒத்துழைத்து இக்கழகத்தைச் சித்திகரமாக முடிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம். பாடசாலைகளின் இரண்டாந்தவணை விடுமுறைத் தொடக்கம் 4-8-49 என மாற்றப்பட்டிருக்கிறது.

G. A. GURUSAMY, O. M. I.
Gen. Manager, R. C. Schools.
Jaffna, 6-7-49.

சத்தியவேத
பாதுகாவலன்
1949-ம் ஆண்டு
ஆடி மாசம் 7-ந் திகதி

## மருதமடுத் திருப்பதி மகோற்சவப்பூர்த்தி

மன்னார் மாதோட்டமானது சுத்தசத்தியவேதநாடு. முதல் முதலாகச் சத்தியவேத விசுவாசம் முளைக்கப்பெற்றநாடு. பின் அவ்விசுவாசமானது ஆலாவிருட்சம்போல் படர்ந்து அடர்ந்து வியாபித்து மாட்சிமைபெற்றிருந்தநாடு. தமிழரசர் காலத்துக் கத்தோலிக்கர் வேதத்துக்காகத் தம்உயிரைக்கொடுத்து இரத்தஞ் சிந்தியநாடு. இவ்வாறு வேதவிசுவாசத்திடனும் பெருக்கமும் மாட்சிமையுமுடைத்ததாயிருந்த அந்நாட்டிலே ஒல்லாந்தர் நடத்திய வேதகலாபனையினாலே குரு, கோயில், பூசை, தேவாராதனைகளின்றி நெருக்கிடைப்பட்டுச் சஞ்சலமுற்றிருந்த கத்தோலிக்கர், அக்கொடிய அரசருடைய ஆணைக்கு எட்டாத இடந்தேடிச்சென்று, தூரத்தேயுள்ளதும் வனமிருகங்கள் உறைவதும் சோலைக்காடுகளுள்ளதுமான மருதமடுவைத் தெரிந்து, செபமாலை மாதாவின் நாமத்தினால் ஒருசிறு கோவிலைக் கட்டி, கிறீஸ்தவரும் குருமாரும் ஒளித்திருந்துதேவாராதனைகளை நடத்தி, வேதமுறைகளை அனுசரித்து வந்தனர். அக்காலத்தில் ஒளிவிடமாய் விளங்கிய மருதமடுத்திருப்பதியானது தற்போது பகிரங்கதேவாராதனைத் தலமாக—பிரசித்திபெற்ற யாத்திரைத்தலமாக—விளங்குகின்றது.

இப் பிரபலமிக்க மடுப்பதியில் கோவில் கொண்டெழுந்தருளிக் கருணைமழை பொழிந்து வருகின்ற திருச்செபமாலைமாதாவின் சுரூபத்துக்குப் பாப்பரசரின் நாமத்தினால் சென்ற 1924-ம் ஆண்டு முடிசூட்டப்பட்டது. இந்த முடிசூட்டு வைபவத்தின் கால்நூற்றாண்டுப் பூர்த்தி விழா இவ்வருடம் திருப்பதியில் ஆடி மகோற்சவமாகக் கொண்டாடப்பட்டது. மடுப்பதிச்சரித்திரத்தில் இந்த யூபிலிவிழாவே மிகஉன்னதமாய்க் கொண்டாடப்பட்டதாகும். யாத்திரிகளின் தொகையோ இவ்வருடம்போல் முன் ஒரு காலமுமிருந்ததில்லை. சுமார் ஒன்றரை லட்சம் யாத்திரிகள் வந்திருந்தனர் என்று மதிப்பிடலாம். திருப்பதியானது சனத்திரளாலே எள்ளிட இடமின்றி நிறைந்து மரக்காடாயிருந்த அவ்விடமெல்லாம் சனக்காடாய்க் காட்சியளித்தது. ஆறு மேற்றிராணிமாரும் நூற்றுக்கு மேற்பட்ட குருமாரும் சமுகமாகி யாத்திரிகளுக்கு வேண்டிய ஞானஉதவிகளைச் செய்தனர். மடுப்பதித்தலைவர் யாத்திரிகளுக்கு வேண்டிய எல்லாவசதிகளையும் செய்துவைத்திருந்தார். இம்முறை மடுப்பதியிலநடைபெற்ற தேவஆராதனைகளெல்லாம் மிகமேலானவையாயிருந்தன.- இங்குநடைபெற்ற வைபவங்களெல்லாம் மாதா பத்தியை வளர்ப்பனவாயிருந்தன.

மாதா பத்தியின்மத்தியதானமாய் மாதாவின் அடைக்கலச்சாலையாய், பிரபல யாத்திரைத்தலமாய் விளங்கிடும் மடுத்திருப்பதியானது நாகரிகமிக்க நவீனபட்டணம்போற் காட்சியளித்திருந்தது. இம்முறை எத்துணை சனங்கள் கூடியிருந்தும், எவ்விதமான அசம்பாவிதங்களும் நிகழாதிருந்தது மடுத்தாயாரின் வல்லமைமிக்க புதுமை என்றே சொல்லவேண்டும். இம்முறை எவ்விதமான, களவுகள், விபத்துகள், அசூயைகள், அனர்த்தங்கள், அதிருப்திகளும் நடைபெறாமல் விழா முடிவுற்றதும் மாதாவின் அருட்செயல் என்றே சொல்லவேண்டும். யாத்திரிகளெல்லோரும், மாதாவையண்டிக் களைதீர்ந்து, வேண்டியஉதவிகளைப் பெற்று, குதூகலத்துடன் தம் வீடுகளுக்குத் திரும்பினர். மடுப்பதிவைபவங்களைக் கவனித்த பல்லாயிரக்கணக்கான பிறமதஸ்தர்களும்மாதாவைஅண்டிவரவும், எம்திருவேதத்தை மதிக்கவும் நிச்சயமாக நன்மனமுற்றிருப்பர். முன் எப்போதும் நடந்திராதவாறு இம்முறை 75-க்கு மேற்பட்டோர் மனந்திரும்பி ஞானதீட்சை பெற்றுள்ளனர். மடுத்தாயார் தமது திவ்வியபதிக்கு அநேக பக்தர்களை வருடாவருடம்அழைத்து, ஆட்சிகொள்ளத் தயாராயிருக்கின்றார்.

மடுத்தாயார் எமக்கு மாத்திரமல்ல— பிறசமயத்தவர்களாகிய நமது அயற்சகோதரருக்கும் தாயல்லவா? இவர்களெல்லோரும் ஓர்நாள் எம்தாயின் பிள்ளைகளாய்வந்து சேரவேண்டுமென—இந்தத்திருப்பதிவைபவ முடிவின்போது—ஆசிப்போமாக! நாமும் இத்தாய்க்கு ஏற்ற பிள்ளைகளாய் வாழ்ந்துவரமுயற்சிப்போமாக! திருப்பதி செழிப்புற்று, சிறப்புற்று, விர்த்தியாக வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக! மடு அன்னையின் கருணைவெள்ளம் இலங்கை எங்கணும் பெருக்கெடுப்பதாக!

—அல்பெனியாவின் வேதவிரோத அரசாங்கம் அங்குள்ள 5 மேற்றிராணிமார்களில் இருவரைக் கொன்றுவிட்டது. ஒருவர் சிறையில் இறந்தார். மற்றொருவர் சிறையில் இருக்கிறார். 74 வயதான ஷ்லாக்குஆண்டவர் மாத்திரம் வெளியே இருக்கிறார்.

## மருதமடு நாச்சியார்



கன்னித்தாயே! கண்ணாட்டீ!
கன்னற்சாறே! கனியமுதே!
வன்னித்தாயே! வழித்துணையே!
வந்தித்தோமே வாழியவே!

* * *

எட்டுத்திக்கும் நின்கருணை
எண்ணித் தாசர் வந்தோமே
துட்டத்தனமும் மாறிடுமே
துதிப்போமுமது தாழ் நிதமே!

* * *

வையம் எங்கும் வணங்கிடுவர்
வாணீ! உன்தன் புகழ்பெரிதே
ஐயம் வேண்டாம் அம்மணீ நீ!
ஆச்சீ! லங்கைக் கரசியலோ!

* * *

வாழ்க! மடுவும்! வளர்பதியும்!
வழி வழிவந்த தமியர்களும்
சூழ்க! இன்பம் நாடோறும்!
துணைதாய் மடுவாள் தயவாலே!

## சரித்திரங் கண்டிராத சனத்திரள்

### நடுக்காட்டில் தனிக்காட்சியளிக்கும் பொன்நகர்

ஈசன்குமாரனுகிய குமரேசனும் யேசுபெருமானை ஈன்றெடுத்தவளாய், உடுமுடிசிரத்தி மீனாட்சியம்மையென்று நாம் துதித்துப் போற்றுபவளாயிருந்து கருணைமழை பொழிந்து வருகின்ற தேவதாயின் மேலான பத்திக்கு நம் இலங்கைத்தீவில் முக்கிய மத்தியகேந்திரஸ்தானமாய்த் திகழ்வது மருதமடுத் திருப்பதியாகும்.

இலங்கைக் கத்தோலிக்க மக்களின் பிரபலியமிக்க புண்ய யாத்திரைத்தலமாய் வனவிலங்குகளுறையும் அடர்ந்த கானகத்தின்மத்தியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பழமையும் புதுமையும் மிக்க இத்திருப்பதியின் வருடாந்த மகோற்சவம் மங்களமாகவும் மகிழ்வாகவும் புனிதமாகவும் நிகழ்ந்தேறியது.

மருதமடுக் கன்னிகைக்குப் பொன்முடி புனைந்த கால்நூற்றாண்டுப்பூர்த்தி விழா இம்முறை அப்பதியில் கொண்டாடப்பட்டமேயானது அப்பதியின் புனிதத்தன்மையையும், அப்பதி அடைந்துகொண்ட கண்ணியத்தையும் எப்போதும் எங்கும் பிரசித்தப்படுத்துவதாயிருக்கின்றது.

சாதாரணமாகச் சனசஞ்சாரமற்று வனவிலங்குகள்உறைந்துகிடக்கும் ஒரு இடமானது குறித்த சிலதினங்களில் பிரஸ்தாபமிக்க நகரம்போன்ற காட்சி கொடுத்து பக்தர்களைப் பரவசப்படுத்தத்தக்கதாகத் திகழும் மாட்சியானது ஒரு அதிசய நிகழ்ச்சிஎன்று துணிந்து கூறலாம்.

மருதமடுச் சரித்திரத்தில் முன் எப்போதாவது இப்படியான சனத்திரள் கூடியதில்லை. மடுத்தாயாரின் முடியணிவு வெள்ளிவிழாவை அவவின்முன் கொண்டாடவும்,அங்குநடக்கும் வைபவங்களைக் கண்டு ஆனந்திக்கவும், இலங்கையில் எல்லாக்கோணங்களிலிருந்தும் கத்தோலிக்கர்களும்,பக்தர்களான மற்றும் சமயத்தவர்களும் புற்றீசல்போலும், கடலலைபோலும், முகிற்கூட்டம்போலும் திரள்திரளாக வந்துகுவிந்தனர். ஆனிமாச நடுப்பகுதியிலிருந்தே மாதாபக்தர்கள் மடுப்பதியையடையத் தொடங்கிவிட்டனர். தினமானம் யாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிகளின்தொகை அதிகரித்துக்கொண்டேவந்தது. திருநாளன்று காலைவரையும் சனங்கள் வந்துகொண்டிருந்தனர். பிரயாணவசதிகளும் நன்றாய்ச் சித்தஞ்செய்யப்பட்டிருந்தன. புகையிரதத்தால்வந்த யாத்திரிகளைத் திருப்பதிக்குக் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பை றெயில்வேய்ப் பகுதியினர் ஏற்று நடத்தினர்.

மோட்டர் வாகனங்களினால் முன் எப்போதும் வந்திராத யாத்திரிகள் வந்தனர். இம்முறை 12,000க்கு மேற்பட்ட மோட்டர் வாகனங்கள் மடுப்பதியை அடைந்துள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வண்டிகளாலும், கால்நடையாகவும் பல்லாயிரக் கணக்கானோர் வந்துசேர்ந்தனர். மொத்தமாக இவ்வருட யூபிலி விழாவுக்குச் சுமார் ஒன்றரை லட்சம் யாத்திரிகள் வந்திருந்தனர் என்று நிச்சயிக்கலாம்.

25 வருடங்களின்முன் நடைபெற்ற முடிசூட்டுவைபவத்தின்போது 50,000 யாத்திரிகள் வந்திருந்தனரென மதிப்பிடப்பட்டிருந்தது. இம்முறை அதைப் போலும் நிச்சயமாக நாலு அல்லது ஐந்துமடங்கு சனர் வந்தனரென்று மதிப்பிடலாம். இந்தியாவிலிருந்து 2,000க்கு மேற்பட்டோர் இத்திருப்பதிக்கு வந்திருந்தனர்.

## ஆயத்த ஏற்பாடுகள்

முன்னிலும்பார்க்க அதிகமானோர் அங்கு வருவார்களென எதிர்பார்த்து மடுப்பதிப் பரிபாலன சுவாமியார் வேண்டிய முன்னேற்பாடுகளெல்லாம் செய்துவைத்தனர். திருப்பதியையடுத்துள்ள காட்டுப்பிரதேசம் திருத்தப்பட்டு மாஞ்செடிகள் அழிக்கப்பட்டு யாத்திரிகள் தங்குவதற்கேற்றதாகத் தயார்செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த இடந்தானும் யாத்திரிகளுக்குப் போதியதாகாமையால் யாத்திரிகளில் அநேகர் திருத்தப்படாத அடர்ந்த காட்டுக்குள்தானும் தங்கியிருந்தனர்.

யாத்திரிகளுக்கு எவ்வித குறைவும் நேரிடாதபடி வேண்டிய சௌகரியங்களையெல்லாம் ஏற்பாடுசெய்திருந்தமையானது அத்திருப்பதித் தலைவரின் நிர்வாகத் திறனுக்கு உத்தம அத்தாட்சியாய் இருந்தது. மடுப்பதியில் இம்முறை தண்ணீர்க்கஷ்டமோ, உணவுக் கஷ்டமோ, வெளிச்சக் கஷ்டமோ, இருப்பிடக்கஷ்டமோ, போக்குவரத்துக்கஷ்டமோ இவை அற்பமேனும் ஏற்படாமலிருந்தது மடுமாதாவின் மறைவான, மாபெரிய அற்புதம் என்று சொல்லலாம். மருதமடுக் குளமானது போதியநீர் நிரப்பப்பட்டிருந்தது. யாத்திரிகள் தாராளமாய்ப் பாவிப்பதற்கு ஏற்றதாகத் தண்ணீர்த் தொட்டிகள் பெருப்பித்துப் புதுப்பிக்கப்பட்டிருந்தன. புதிய கிணறுகளும் சிலவெட்டப்பட்டிருந்தன. சக்திமிக்க மின்சார இயந்திரம் திருப்பதி முழுவதையும் வெளிச்சமயமாக்கிக் கொண்டிருந்தது.

இத்தனை யாத்திரிகட்கும் தேவையான உணவுப்பொருட்களெல்லாம் திருப்பதியில் ஏராளமாய்க்கிடைத்தன. இப்பதியிலுள்ள ஐக்கியசங்கக் கடையானது யாத்திரிகளின் உணவுத் தேவைகளைச் சமாளித்துக்கொண்டிருந்தது. முன்னையிலும்பார்க்க அதிகமான வியாபார ஸ்தானங்களும் உணவுச்சாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

முடிசூட்டு வெள்ளிவிழாவை முன்னிட்டு திருப்பதியானது புதிய தோற்றமளித்து விளங்கியது. எங்குபார்த்தாலும் ஏதோ ஒருபுதியதன்மை எவரையும் கவர்ச்சித்துக்கொண்டேயிருந்தது. திருப்பதியில் பிரவேசிக்கும் பிரதான வாசலில் அழகிய மாதாவின் பெரிய சுரூபமொன்று புதிதாக அமைக்கப்பட்டிருந்தது. யாத்திரிகளை அன்போடு வரவழைக்கும் பாவனையில் அத்திருச்சுரூபம் அமைந்திருப்பதை எல்லா யாத்திரிகளும் கவனித்திருப்பர். இத்திருச்சுரூபத்துக்கு-வரவேற்கும் மாதா சுரூபம் என்றோ—அரவணைக்கும்மாதா சுரூபம்என்றோ—பெயரிடவேண்டியது பொருத்தமானதாகும்.

திருப்பதியின் ஒருபகுதியில் லூர்து மாதாகெபி அமைக்கப்பட்டிருப்பது யாத்திரிகர்களுக்கு முன்பே தெரியும். இன்னொரு பகுதியில் திருப்பதியின் காட்டுப்பகுதி எல்லைக் காவலாகப் புதிதாய்ப் பத்திமாதாயாரின் பாரிய சுரூபமொன்று அலங்காரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. பத்திமா மாதாவின் பெயரால் ஒரு புதிய தெருவும் திறக்கப்பட்டுள்ளது.

இன்னொருபக்க எல்லையையடுத்து கிறீஸ்து இராசாவின்திருச்சுரூபம் சிங்காரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதையடுத்துள்ள பாதை கிறீஸ்து இராசாவீதியெனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தயூபிலிவிழாவைஎப்போதும் நினைவூட்டத்தக்கதாகப் புதிதாக ஒரு தெரு அமைக்கப்பட்டு "யூபிலிவீதி" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

யாத்திரிகளின் வசதிக்காகவும் குருமாரின் தேவைகளுக்காகவும் அநேக கட்டடங்கள் புதிதாய் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மடுத்தாயின் திவ்விய ஆலயமானது சகல சிறப்புகளுடன் துலங்கிக்கொண்டிருந்தது. புதிதாக மேல்மச்சுவேலை செய்யப்பட்டு முடிவு பெற்றிருந்தது. ஆலயத்துட் புறமும் முகப்பும் வனப்புடன் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆலயச் சிறப்புகளுள் எல்லாம் மிகவும் முக்கியமும் முதன்மையுமாய் விளங்கியது மடுமாதாவின் புதிய வெள்ளைச் சுரூபமாகும். இச்சுரூபம் இந்த யூபிலி விழாவுக்காக ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்டது. மடுத்தாயின் புதுமையான சுரூபத்தின் அசேதசாயலாக சுத்தவெண்மை மாபிள் சாந்தில் நுட்பமாகச்செய்யப்பட்டது. இத்திருச்சுரூபம் ஆலயத்தின் வெளிமுகப்புப்பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது. இது மாதா பக்தர்களை ஆனந்தத்தில் அமிழ்த்திவிடுவதாய் இலங்குகின்றது. வெளிமுகப்புப் பகுதியானது திருத்தப்பட்டு புதிய சுற்றுக்கிறுதிகளிடப்பட்டுப் பொலிவுடன் விளங்கியது. அதில் நடக்கும் ஆராதனைகளை வெகு தூரத்திலிருந்தும் பார்க்கக்கூடியதாய் அமைக்கப்பட்டிருந்தது. ஆராதனை மைதானம் போதியவெளிச்சம் இடப்பட்டிருந்தது. ஒலிபரப்பிகள் பொருத்தப்பட்டிருந்தன.

இவ்வகையான பல புதிய ஏற்பாடுகள் இவ்வருடம் நடைபெற்ற வெள்ளிவிழாவுக்கு அதிக மேன்மையைத் தந்துகொண்டிருந்தன.

## திரு ஆராதனை வைபவங்கள்

இம்முறை இப்பதியில் நடைபெற்ற திரு ஆராதனை வைபவ நிகழ்ச்சிகளின் மேன்மையையும் கிரமத்தையும் வரிசைப்படுத்திக் குறிப்பிடுவது இயலாக் கருமமாகும். மாதாபக்தியை வளர்த்து தேவனையணுகத்தக்கதாக, எல்லா ஞானமுயற்சிகளும், செய்யப்பட்டன. 23-ந்திகதி தொடக்கமாக காலைமாலை ஆராதனைகள் பத்திச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. யாத்திரிகளின் ஞானதேவைகள் பூரணமாய்க் கிடைக்கக்கூடியதான பக்திமுயற்சிகளும்ஆராதனை வழிபாடுகளும் கிரமப்படுத்தப்பட்டிருந்தன. இலங்கையின் பொதுப் பெரிய யாத்திரைப்பதியான இத்திருப்பதியில் நடைபெறும் புனிதவைபவங்களிற் கலந்துகொள்வதற்காக இலங்கையிலுள்ள எல்லா மேற்றிராணிமாரும் வந்திருந்தனர். எல்லா மேற்றிராசனங்களிலுமிருந்து சுமார் நூறுகுருமார் வந்திருந்தனர். இவர்கள் எல்லோரும் யாத்திரிகளின் ஞானதேவைகளுக்கு உதவிசெய்வதில் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும், ஓயாது, உறங்காது ஈடுபட்டிருந்தது எல்லா யாத்திரிகளையும் கவர்ந்திருந்தது.

காலைவேளைகளில் எல்லாப்பீடங்களிலும் தொடர்ந்து திருப்பூசைப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. எவ்வேளையிலும் குருமார் பாவசங்கீர்த்தனம் கொடுத்தவண்ணமாயிருந்தனர். பலிபூசை ஒப்புக்கொடுப்பதிலும், தேவநற்கருணை கொடுப்பதிலும், பாவசங்கீர்த்தனம் கேட்பதிலும், ஞானவிசாரணை செய்வதிலும் குருமார்ஆற்றிய உன்னதமான சேவையே இவ்விழா சித்தியாய் நடந்தேறியதற்கு மேலான காரணங்களாகும். நடைபெற்ற ஆராதனை முயற்சிகளில் முக்கியமானவைகள்: மரியாயின் இரவுகளாம். இவை 29-ம் 30-ந்திகதி இரவுகளில் நடைபெற்றன. வெள்ளிவிழாவுக்கெனச் சித்தஞ்செய்யப்பட்டிருந்த இந்த மரியாயின் இரவுகள் வெகு பத்திவிநயமாய் விமரிசையாய் நடைபெற்றன.

29-ந்திகதி இரவு 10 மணிக்கு நடைபெற்ற மரியாயின் இரவு தமிழில் நிகழ்ந்தது. யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் எக்காளம் எனப் புகழப்படும் பிரபல பிரசங்கியாராகிய அதி. வண. S. பீற்றர் O. M. I. சுவாமியார் அவர்கள் முதல் மரியாயின் இரவை நடப்பித்தார். முதலில் செபமாலைக் காரணிக்கங்கள் விளக்கஞ்செய்யப்பட்டுச் செபிக்கப்பட்டன. பின்பு திருமணித்தியாலம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத் துணைஆயர் அவர்களால் நடுச்சாமப்பூசை வைக்கப்பட்டது. பூசைச் சடங்குகள் வியாக்கியானஞ்செய்யப்பட்டன. 30-ந்திகதி மாலை நடைபெற்ற மாலை ஆராதனைக்கு ஏராளமானவர்கள் வந்திருந்தனர். வெளிமைதானம் முழுவதும் யாத்திரிகள் நெருங்கி அடர்ந்திருந்தனர். அப்போது சிலாபமேற்றிராணியார் அவர்களால் சிங்களத்தில் மிக உன்னதமான பிரசங்கம் சொல்லப்பட்டது. அன்று இரவு நடைபெற்ற மரியாயின் இரவு சிங்களத்தில் நடைபெற்றது. சலாபமேற்றிராணியாரால் நடுச்சாம வியாக்கியானப்பூசை நிறைவேற்றப்பட்டது. அன்றுதானே பச்சாத்தாப சுற்றுப்பிரகாரம் ஒன்றும் நடைபெற்றது. சுற்றுப்பிரகாரம் நடைபெற்ற மேரையைக்கண்ட பிறமதஸ்தரெவரும் அதிசயிக்காமல் இருக்கவில்லை. இச்சுற்றுப்பிரகாரம் இரண்டரைமைல் தூரத்தைக் கடந்துசென்றது.

1-ந்திகதி யாத்திரிகரெல்லோரும் விசேஷ சுறுசுறுப்புடன் இருக்கக் காணப்பட்டனர். கோவிலுக்குச் செல்லுவதிலும் பாவசங்கீர்த்தனஞ்செய்வதிலும் மாதாவை வணங்குவதிலும் உற்சாகமாயிருந்தனர். சகல குருமாரும் ஓய்வில்லாமல் பாவசங்கீர்த்தனம்கேட்டுக்கொண்டேயிருந்தனர். ஞானோபதேசமண்டபத்தில் சுவாமி இராசநாயகம் அவர்களும் அவரின் உதவிக்குருவானவரும் வேர்க்கக்களைக்கவுழைத்து பிறமதஸ்தரை மனந்திருப்பிக்கொண்டிருந்தனர். விசாரணைசெய்து, ஞான உபதேசம்படிப்பித்து, ஞானத்தீட்சை கொடுத்துக்கொண்டிருந்தனர். சென்ற வருடங்களிலும் பார்க்க இம்முறை அதிகமான பிறமதஸ்தர் மடுப்பதியில் மனந்திரும்பி ஞானத்தீட்சை பெற்றுக்கொண்டது மடுப்பதிக்கு விசேஷ கண்ணியத்தைக் கொடுப்பதாயிற்று. சனக்கூட்டம் அதிகரித்ததால் அநர்த்தங்கள் நேரிடுமென அஞ்சி மாதாவுக்கு நேர்த்திசெலுத்தச் செல்வோரெல்லாம் வரிசையாய் நிற்கவேண்டியவர்களானார்கள். எப்படியிருந்தும் சனங்கள் அமைதியாயும் பத்தியாயும் மாதாவைத் தரிசித்துத் தம் நேர்த்திகளைச் செலுத்தினர்.

சாயந்தரம் நடைபெற்ற முடிவு மாலையாராதனை நிகழ்ச்சிகள் யாத்திரிகர்களை வெகுவாய்க் கவர்ச்சித்தன. வெளிமைதானம் முழுதும் சனங்கள் எள்ளிட இடமின்றிக் கூடியிருந்தனர். கண்ணுக்கெட்டியதூரம் முழுதும் சனங்கள் நெருங்கியிருக்கக் காணப்பட்டனர். குருக்கள் கூட்டமானது மேற்றிராணிமாருடன் பீடத்தையடுத்த ஆசனங்களில் அமர்ந்திருந்தது.

கொழும்பு அதிமேற்றிராணியார் அவர்களால் வேஸ்பர் பாடப்பட்டது. அவர்களாலேயே சிங்களத்தில் மிகவும் அருமையான பிரசங்கமும் சொல்லப்பட்டது. திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதமும் அருளப்பட்டது. அன்றும் வந்துகூடிய சனங்களினால் மடுப்பதி தேங்கிவழிந்து நின்றது. வனவிடுதிகளில் தங்கிய சனங்கள்போக மீதிப்பேர் இரவுமுழுவதையும் வெளிமைதானத்திலேயே கழித்தனர். இரவிற்றானும் மைதானம் அற்ப இடமுமின்றி நிரம்பியிருந்தது.

## திருநாள் வைபவம்

பொழுதுபுலர்ந்தது. மாதா பக்தர்கள் கோவிற் பீடங்களை முற்றுகையிட்டனர். யாத்திரிகள் எல்லோரும் ஒன்று இரண்டல்ல பல பூசைகளைக் கண்டு திருநற்கருணை பெற்றனர். காலை 7-30 மணிக்கு வெளிப்பீடத்தில், யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவர் அவர்களால் பெரிய பாட்டுப்பூசை நடத்தப்பட்டது. மைதானமெங்கும் மாதா பக்தர்கள் கூடி நெருங்கிச் செபித்துக் கொண்டிருந்தனர். அத்தனை ஆயிரவரும் சத்தம் சந்தடியில்லாமல் அமைதியாகவும் பத்தியாயுமிருந்து பூசை கண்டதைக் கண்ணுற்ற பிறசமயிகள் எல்லோரும் அதிசயித்து நின்றனர். வெயிலையும் களைப்பையும் நெருக்கத்தையும் மறந்து மாதாவின் அருளை வேண்டுவதற்காய்க் காத்திருந்த சனங்களைப்பார்த்து எந்தப் பிறசமயத்தவரும் ஆச்சரியப்படாமலிருப்பரா?

## மாதாவின் பவனி

பூசைமுடிந்ததும் மாதாவின்பவனி நடைபெறத் தொடங்கியது. இம்முறை நடைபெற்றதைப்போலும் பத்தியருட்சியாய் முன்எப்போதாவது சுற்றுப்பிரகாரம் நடந்ததில்லை. வெடி தீருவதோ, பொரிஎறிவதோ, ஆரவாரம்செய்வதோ அக்களிப்பதோ இல்லாமல் முற்றும் அடக்கஒடுக்கமாயும், அமைதியாயும் நடைபெற்ற இந்தச் சுற்றுப்பிரகாரமானது, இப்பதியில் நடைபெற்ற சகலவைபவங்களுக்கும் முடிசூட்டுவது போன்றிருந்தது. மேகம் இருண்டு மழையும்தூமித்தது. அதினால் சுற்றுப்பிரகாரப் பாதையிலுள்ள புழுதிகள் அமர்ந்தன. சுற்றுப்பிரகார பவனிசெல்லும் கிரமம்ஒலிபரப்பியில் வெளியிடப்பட்டது. மைதானத்தில் குழுமியிருந்தபக்தர்களெல்லோரும் நெடுமுழந்தாளிலிருந்து இருகைகளையுமுயர்த்தி மாதாவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். எல்லோரும் 'ஆவே மரியா' என்னுங்கீதத்தைப் பாடும்போதே மாதாவும் திருத்தேரில் எழுந்தருளினாள். மாதா பக்தர்களெல்லோரும் கையெடுத்து கண்ணீர் உகுத்து அம்மா! தாயே! அம்மே! மரியே! என்று உரக்கக் கத்தியகுரலானது பரலோகமட்டும் சென்றிருக்கும். என்றுமில்லா அமைதியுடனும் பத்தியுடனும், திருத்தாயார் ஊர்வலம் வந்தகாட்சியை என்னென்போம். இலங்கையிலுள்ள எல்லாமேற்றிராசனங்களைச்சேர்ந்தவர்களும் மாதாவின் கைத்தேரைச் சுமக்கக்கூடியதாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

செபத்துடனும் தேவகீதத்துடனும் நடத்தப்பட்ட சுற்றுப்பிரகாரம் முடிவுற்று கோவில்முகப்பையடைந்ததும் சனங்கள் கடல்மடை திறந்ததுபோல் திரண்டுகூடி நின்றனர். எல்லோரும் முழங்காலில் இருங்கள் என்று ஒலிபரப்பிமூலம் அறிவிக்கப்பட்டதும் சகலரும் முழந்தாளிட்டு 'ஆவே மரியா' கீதம்பாடினர். மாதா, கோவிலையடைந்ததும், சிங்களத்திலும், தமிழிலும் ஒப்புக்கொடுக்கும் செபம் வாசிக்கப்பட்டது. பின் மாதா சுரூபத்தினால் ஆசீர்வாதம் அருளப்பட்டது. அப்போது யாத்திரிகள் காட்டிய மாதா பத்தியைப் பார்த்திருந்த பிறசமயத்தவர் அதிசயமடைந்தேயிருப்பர். இத்துடன் முடிசூட்டுவெள்ளிவிழா முடிவுபெற பக்தர்களெல்லோரும் திருத்தாயாரிடம்சென்று நன்றிகூறிப் பிரியாவிடைபெற்று ஏகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்காரம்

நடுச்சாமம் அரிக்கன்லாம்பு வெளிச்சம் மின்னிக்கொண்டிருந்தது. என் மனைவி மக்களெல்லாரும் நல்லநித்திரை. ஆனால் எனக்கோ நித்திரைவரவில்லை. என் அடுத்தநாள் சிங்கப்பூர்ப் பிரயாணத்தை நினைத்தால் நித்திரை தான் எப்படிவரும். ஏதேதோ சிந்தனைகள் தான் அலையலையாகவந்துமோ தினம் திடீரென்று சுவர் அலுமாரியில் ஏற்பட்டகலவரம் என்சிந்தனைகளைப் பறக்கடித்துவிட்டது. சத்தம்சந்தடிசெய்யாமல் அந்தப்பக்கம் கவனித்தேன். 'மோட்டர்மில்க்' போத்தல் பெரிய இறுமாப்புடன் அட்டகாசஞ்செய்தது. என்னைப்பார். நான் ஒரு இராசா மாதிரி இல்லையா? எனக்கு நடக்கும் சீர்வரிசைகளைப் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறீர்கள். ஒரு இலையான் தானும் என்னில்படவிடுவார்களா? எனக்குள்ள செல்வாக்கை என்னென்பது. குழந்தைகள் தொடங்கி வயோதிபர் ஈறுகவுள்ள எல்லோருமே என்னை எவ்வளவு அத்தியந்த ஆவலோடுவிரும்புகிறார்கள். நோயாளிகூட என்னில் ஒருகிளாஸ் போட்டால் எவ்வளவு தைரியத்தோடு காணப்படுகிறான். நீங்களும் இங்கே குந்திக்கொண்டுதானே இருக்கிறீர்கள். நாயென்று கவனிக்கிறார்களா? சீ! சீ! இப்படி மானங்கெட்டுவாழ்வதிலும் மாண்டுபோனால் தான் என்ன!

இதனுடைய அகம்பாவம்பிடித்த பார்வையும், பேச்சும் எல்லோரையும் அப்படியும் இப்படியுமாக அசைத்துவிட்டது. மண்ணெண்ணெய்ப் போத்தலால் மௌனமாக இருக்கமுடியவில்லை. ஆத்திரம் உச்சிக்கேறி இடிஇடியென்று சிரித்தது. 'தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பிசண்டைப்பிரசண்டந்தான்' செய்வீர்போல இருக்கிறது. என்ன! உன்னைப்போல் ஒரு சர்வமுட்டாளை என்சீவியத்தில் கண்டதேயில்லை. நானும் இங்கே இருக்கிறேனென்பதை நீ முற்றாய் மறந்துதான் போனாய். 'உப்புச்சமைந்தால் தான் உப்பின் அருமைதெரியும்.' அதிகம் உளறிப்பயனென்ன? இந்தவேளை நான் இல்லாவிட்டால் நீர் முகம் பார்த்துக் கதைக்கமுடியுமா? உலகம் முழுவதையும் இருள் அல்லவா மூடிக்கொள்ளும். பகலில் சூரியன், இரவில் நான் அல்லவா வெளிச்சத்தைக்கொடுக்கிறோம். என்னையல்லவா நீ மகா இராசாவாகமதிக்கவேண்டும். இரண்டு கையுமெடுத்துக் கும்பிடவேண்டும்.

இதைக்கேட்ட மோட்டர்மில்க் போத்தலுக்கு இம்மைமறுமை தெரியாமல் கோபம்பிய்த்துக்கொண்டுவந்துவிட்டது. என்னசொன்னாய் சீ நாயே! நீயா! உனக்கும் ஒரு எண்ணம். எனக்குக்கிட்டத்தானும் நிற்க உனக்குத் தகமை உண்டா? என்குலகோத்திரமென்ன! குடிப்பெருமையென்ன! உன் ஊழல்களெல்லாம் அம்பலத்தில் வரத்தானே இவ்வளவு பாடுபட்டாய். ஊரைஉலைமூடியால் மூடவா நினைத்தாய். "தானுமொரு ஆளாம், தவிடுமொரு கொழுக்கட்டையாம்" என்றாற்போல நீயுமொரு ஆளென்று வாய்திறந்து பேசத்தொடங்கிவிட்டாயா? என்னிடம் வந்துபோகிறவர்களைக் கொண்டுதானும் என்பெருமை உனக்கு விளங்கவில்லையா? ஒருநாளைக்கு எத்தனை முறைஎன்று எசமானும் எசமாட்டியும் பிள்ளைகளும் என் அண்டைவருகிறார்கள். உன்கிட்ட ஆர்வருகிறார்கள். வந்தாலும் சீ! சீ! அந்த அரோசிக்கக்கூடிய வேலைகாரன் தானே. அவன் தானும் உன்னை மதிக்கிறானா?

துள்ளாதே துள்ளாதே, உனக்கு ஆங்காரம் மிஞ்சிவிட்டது. ஏதோ உனக்கு அழிவுகாலம் வந்துதான்விட்டதுபோலத் தோற்றுகிறது. உனக்குத் தெரியாதா? சிங்கம் பாழ்ங்கிணற்றில் விழுந்து இறந்தகதை. தன்னைவிட வேறேசிங்கம் உண்டா என்ற கர்வமல்லவா, தனக்கெதிரே தோற்றுவது நிழல் என்பதையுங்கூட யோசிக்கவிடவில்லை. நாங்களும் தேவனைப்போல் ஆனாலென்ன என்ற ஆங்காரமல்லவா, சர்வஅலங்காரமுள்ள சம்மனசுகளையும் பசாசுகளாக்கிவிட்டது. அதனாலல்லவா நரகபாதாளம் திறக்கப்பட்டது என்று மண்ணெண்ணெய்ப் போத்தல் சொல்லிவாய்மூடவில்லை என்குழந்தை வீரிட்டு அழத்தொடங்கியது. உடனே என்மனைவி அடிப்போத்தலிலிருந்த மோட்டர்மாவை எடுத்துக்கொண்டு பழம்போத்தல் கிடந்தமூலையிலே அதனை வீசிவிட்டாள். நித்திரைச் சோம்பலில் அவளுடைய கைதவறிச் சற்று உரமாகவிழுந்ததுதான். போத்தல் சுக்குநூறாகப் பறந்தது. இந்தக் காலம் எல்லாம் கண்ணுக்கு முன்னாலே என்று மண்ணெண்ணெய்ப் போத்தல் மாத்திரமல்ல எல்லாப் போத்தல்களும் சொல்லிக் கலகலவென்று சிரியாமல் வேறென்ன செய்யமுடியும்.

"ஆனந்தம்"

---

### கௌரவ மந்திரி
## ஜி. ஜி.க்கு வரவேற்பு
முல்லைத்தீவு

மீன்பிடி-மீன்பிடி ஆராய்ச்சி-கைத்தொழில்மந்திரி கௌரவ ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் முல்லைத்தீவுக்கு விஜயஞ்செய்ய இருப்பதை மக்கள் அறிந்ததும் அளவிலா ஆனந்தங்கொண்டு சம்மாட்டியார், தனித்தொழிலாளர், தும்புக்கைத்தொழில் அங்கத்தவர்என்று மூன்றுபகுதியாக வரவேற்புச்செய்யத் தீர்மானம்பண்ணினர். அதன்படி 19-6-47 மாலை 6 மணியளவில் பல்லாயிரக்கணக்கானோர் சூழ்ந்துநிற்க, கௌரவ மந்திரியார் வந்திறங்கியதும் கட்டளைக்குருவரால் மாலைசூட்டப்பெற்று மேளவாத்தியங்களுடன் அவரை அழைத்துச்சென்று சம்பேதுருவானவர் கோவிலுக்கருகாமையில் அழகுற அமைத்த பந்தரில் கட்டளைக்குருவர் அக்கிராசனம் வகிக்க, நடுவாசனத்தில் கௌரவ மந்திரி அமர்த்தப்பட்டார். திரு. அருளப்பு சம்மாட்டியாரால் வாழ்த்துப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அதன்பின் திரு. ஐயம்பிள்ளை அவர்கள் மந்திரியாரைப் புகழ்ந்து மக்கள் தேவைகளையும் குறிப்பிட்டார். இரண்டாவதாக அளம்பில் றோ. க. பாடசாலைத் தலைமை ஆசிரியர் டி. எம். யேம்ஸ் அவர்கள் எழுந்து, கடந்த சில ஆண்டுகளாக மீன்பிடிச்சங்கத்தின் கேவலநிலையையும் அதனைத் திருத்துதல் அவசியமென்றும் முன்போல் அரிசிப் 'பேர்மிற்'றை அளிக்குமாறும், காவலைக்குக் கயிறு அவசியமானதால் ஓர் தும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துமாறும் குறிப்பிட்டார். பின் கௌரவ மந்திரியார் எழுந்து: அரசாங்கசபை விஷயமாக இவ்விடம்வந்தபோது நீங்கள் காட்டிய அன்பிற்குப் பிரதியுபகாரம் செய்யும்நாள் வந்துவிட்டதென்றும் தாராளமான உதவிகளை ஏராளமாகச் செய்யத் தாம் காத்திருப்பதாகவும் நீங்கள் ஒரு சங்கமாகச் சேர்ந்து இருந்தால் அநேக நன்மைகளைப் பெறமுடியுமென்றும், உங்கள் தேவை, குறைகள்பற்றிப் பேசவேண்டின் கூச்சமின்றி என்னிடம் நேரில்வந்து பேசும்படியும், புதுமுறைகளைக் கையாண்டு தொழில்செய்யவேண்டுமென்பதே எனது பேரவாஎன்றும் கூறித் தமக்குச் செய்யப்பட்ட உபசரணைகட்கு நன்றிசொல்லி முடித்தார். ஈற்றில் கட்டளைக் குருவரால் கௌரவ மந்திரிக்குநன்றிகூறப்பட்டது.

அதன்பின் மந்திரியாரை, தனித் தொழிலாளர் அழைத்துச்சென்று முற்றவெளியில் அமைத்திருந்த பந்தரில் இருத்தி வாழ்த்துப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். மன்னார் நல்லாயன் ஆங்கிலபாடசாலை ஆசிரியர் திரு. ஜி. பெனடிக்ற் அவர்கல் தனித் தொழிலாளர்படும் பல கஷ்டங்களையும் அவர்கள் தேவைகளையும் பற்றிப்பேசினார். அதற்கும் மந்திரியார் தன்னாலானவைகளைச் செய்யக் காத்திருப்பதாகக் குறிப்பிட்டுப் பதில்நன்றி கூறிநின்றார்.

மூன்றாவதாக கோவிற் குடியிருப்பு வாலிபசங்கத்தாராலும், தும்புக்கைத்தொழில் அங்கத்தவராலும் மந்திரியார் அழைத்துச்செல்லப்பட்டு றோ. க. பாடசாலையில் அழகுற அமைத்த ஆசனத்தில் இருத்தி வாழ்த்துப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. அச்சமயம் மாத்தளன் றோ. க. பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. அருளப்பு அவர்கள் ஊரின் தேவைகள்பற்றிக் குறிப்பிட்டார். அதற்கு மந்திரியார் தும்புக் கைத்தொழிலை முன்னிலைக்குக் கொண்டுவரத் தான் துணைபுரிவதாகக் குறிப்பிட்டார். அடுத்தநாள் நாயாறு, அளம்பில், முள்ளிவாய்க்கால் எனும் இடங்களைத் தரிசித்தார். அவ்விடங்களிலும் அவருக்குப் பகிரங்க வரவேற்புகள் நடைபெற்றன. அடுத்தநாள் மந்திரியார் கொழும்பு நோக்கிப் பிரயாணமானார். —கடிதர்

---

## நற்கருணைத் திருநாள்
சுன்னாகம்

சுன்னாகத்திலே திவ்வியநற்கருணைத் திருநாள் சென்ற ஆனிமாசம் 26-ந் தேதி (26-6-49) ஞாயிற்றுக்கிழமை வெகுசிறப்பாகவும், பத்தியருட்சிக்குரிய விதமாகவும் நடந்தேறியது. இதற்காயத்தமாக கோவிலானது என்றுமில்லாக் காட்சியாக பலநிறவஸ்திரங்களாலும், பலவர்ணத் துவசங்களாலும் அலங்கரிக்கப்பெற்றும், பலிபீடமானது பார்த்தோர் பரவசமடையும் வண்ணம் காட்சியளித்தும்நின்றன. திருநாளைச் சிறப்பிக்கும் பொருட்டு சனிக்கிழமை மாலை 7 மணிக்குத் திருஇருதயநாதர் பேரால் வேஸ்பர்பாடப்பெற்று மறுநாட்காலை பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை சூரியனும் தனது ஒளியை மங்கவைக்கும்நேரம், சனசஞ்சாரம் ஓரளவில் வீதிகளில் ஒதுங்கும்நேரம். பலவிடங்களிலுமிருந்துகிறீஸ்தவர்கள் கோவிலைநோக்கிவந்துகொண்டிருந்தனர். சரியாகநாலுமணியானதும் சுற்றுப்பிரகாரத்திற்கு ஆயத்தமாக கட்டளைக்குருவர் வண. B. ஏபிரகாம் சுவாமி அவர்கள் நற்கருணைநாதரைப் பலிபீடத்தின் உயராசனத்தில் எழுந்தேற்றம் பண்ணிவைத்தார். கிறீஸ்தவர்கள் ஒவ்வொருவரும் முழந்தாட்படியிட்டுத் தனித்தனியே பிரார்த்தித்தனர். மணி ஐந்தானதும் வண. N. யோசெவ் சுவாமியவர்கள் நற்கருணை கதிர்ப்பாத்திரத்தைக் காத்தேந்திநிற்க, வண. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமியாரும் வண. J. A. பிரான்சிஸ் சுவாமியாரும் துணைபுரிய பாண்ட்வாத்தியம் இசைக்க குருசு திரியாசு முன்னேசெல்ல பள்ளிச்சிறார்கள், பெண்மணிகள், ஆடவர் முறையே பின்செல்ல, பாடகர் குழாம் கீதம்பாட, நாலிரு பாலியர் மலர்தூவ, பூசைப்பரிசாரர்கள் நால்வர் மேலாப்புப்பிடிக்க நற்கருணைநாதர் வீதியெழுந்தருளினார். சுற்றுப்பிரகாரமானது கோவிலின் முன்பக்கமாயுள்ள ஒழுங்கைவழியேசென்று பெரியதெருவை வந்தடைந்தது. அங்கு மல்லாகம் அம்பனுங்கடவைக் கிறீஸ்தவர்களால் அழகுறஅமைக்கப்பெற்றபந்தரில் இனிதே வந்தமர்ந்தார் நமது கர்த்தர். அங்கு செபம் வாசிக்கப்பட்டு முதல் ஆசீர்வாதம் அருளப்பட்டது. அதைத் தொடர்ந்து வெடிகள் சப்திக்க வீதிவழியே சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. சுன்னாகம் திருஇருதயநாதர்கூட்ட அங்கத்தவர்களால் மனதைக்கவரும் முறையில் அழகுற அமைக்கப்பெற்ற பந்தரில்வந்தமர்ந்தார் சற்பிரசாதநாதர். அங்கு கோவிற்கணக்கப்பிள்ளை அவர்களால் பரிகாரச்செபம் வாசிக்கப்பட்டது. வண. C. H. ஷோவான் சுவாமியவர்கள் வீணைவாத்தியமீட்டப் பாடகர்களால் 'தாந்தும் எர்கோ' என்னும்கீதம் பாடப்பெற்று இரண்டாவது ஆசீர்வாதம் அருளப்பெற்றது. அதன்பின் பலவர்ணத்துவசங்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வீதிவழியே சுற்றுப்பிரகாரம் திரும்பவும் சென்று கோவிலையடைந்தார் நற்கருணைநாதர். அங்கே 'தெதேயும்' என்னும் தோத்திரக்கீதம்பாடப்பெற்றுக் கடைசியாசீர்வாதம் அளிக்கப்பெற்றதும் கிறீஸ்தவர்கள் யாவரும் நற்கருணைநாதரின் ஆசிபெற்றுத் தத்தம் இல்லங்களெய்தினர்.

ஜி. ஜி.

---

## உரும்பிராய்

**திருஇருதயஇராசாங்க ஸ்தாபனம்:**

சென்றஆனிமாதம் 24-ந்திகதி சாயந்தரம் டாங்......டாங்...டாங்...,டாங் என்று மணி நாலு அடித்தது. நாலாபக்கத்திலுமிருந்து உரும்பிராய் றோமான் கத்தோலிக்க பாடசாலையைச் சனங்கள் நிரப்பிக் கொண்டிருந்தனர். கொடிகள் தோரணதுவசங்களெல்லாம் மெல்லியதென்றல் காற்றில் ஆடிஅசைந்து ஊரைஅழைத்துக் கொண்டிருந்தன. சுவாமி J. A. இராசநாயகம் O.M.I., அவர்களுடைய மோட்டர் வண்டி பாடசாலை முற்றத்தில் வந்து நின்றதுதான் தாமதம். கொண்டாட்டம் ஆரம்பமாகிவிட்டது. வெடிகள் சப்தித்தன. மணிகள் ஒலித்தன. கிறீஸ்துஇராசாவுக்கு ஜே! என்று சனங்கள் ஆர்ப்பரித்தனர். சணப்பொழுதில் எங்கும் நிசப்தம் நிலவியது. செபங்கள் ஒன்றன்பின்னொன்றாய் வளர்ந்துகொண்டேயிருந்தன. வண. சுவாமியார் அவர்கள் கிறீஸ்துவே எங்கள் இராயன். எங்கள் ஒவ்வொருவர் குடும்பத்திலும் அவரே இராசரீகம்செய்ய வேண்டுமென்னும் பொருள்பற்றிச் சிறந்தவோர் பிரசங்கம்செய்து பாடசாலையில் திருஇருதய இராசாங்கத்தை ஸ்தாபித்தார்கள். திருஇருதயநாதருக்கு எல்லோரையும் ஒப்புக்கொடுக்குஞ்செபம்சொல்லப்பட்டு தேவதோத்திரக்கீதம் பாடப்பட்டது.

**பிரியாவிடை:**

இதன்பின்பு ஆசிரியர் திரு. றேகேசியன் ஸ்ரனிஸ்லாஸ் அவர்களின் பிரியாவிடை வைபவம் நடந்தேறியது. வண. கட்டளைச்சுவாமியார் அவர்களையும் பிரியாவிடைநாயகர் அவர்களையும் உயர்மேடையில் எழுந்தருளச்செய்து மலர்மாலைசூட்டி வரவேற்றார்கள். அன்பும் நன்றியும் ததும்பிய கீர்த்தனங்கள் பாடப்பட்டன. பாடசாலைச் சிறுவர் சிறுமியர் பலவிதமான தெட்சணைகளைப் பிரியாவிடைநாயகருக்கு வைத்துப்பணிந்தனர். அவருடைய உயரிய குணங்கள் அவரில் காணப்படும் சமூகசேவையாகிய உயர்ந்த இலட்சியம் என்பவைகளைப்பற்றி மெச்சி வண. குருப்பிரசாதி அவர்களும், தலைமை ஆசிரியர் S. இராசேந்திரம் அவர்களும், ஆசிரியர் P. அருளானந்தம் அவர்களு, ஆசிரியர் A. அந்தோனிமுத்து அவர்களும், ஆசிரியர் K. தேவதாஸ் அவர்களும் மிகவிரிவாகப் பேசினார்கள். பிரியாவிடைநாயகர் பலத்தகரகோஷத்தினிடையேஎழுந்து அன்பால் தொடுத்த நன்றிகூறினார்கள். பிரதிமைப்படம்பிடித்தல் சிறந்த தோட்டோபசாரணை என்பவைகளோடு கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

கண்டு களித்தோன்.

---

—கருதினால் மின்ஸென்ரியைச் சிறையில் பார்த்துவிட்டு வந்த ஒரு வைத்தியர், கருதினாலின் நிலைமை மிகவும் மோசமாயிருக்கிறதென்றும் அவர் சுகமடைவது துர்லபமென்றும் கூறுகிறார். சமீபத்தில் ஒரு கன்னியாஸ்திரியின் உதவியால் கருதினாலின் தாய் அவரை ஆஸ்பத்திரியில் கண்டு பேச உத்தரவு கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத வினுவிடை

— II —

பிதாவானவர் எங்கள் தேவாதீனர்

### (6) இரட்சித்தல்

114. இரட்சிக்கும் பிரசாதம் ஆவது என்ன?

நமது ஈடேற்றத்தை மோசப்படுத்தக்கூடிய தின்மைகளிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளுகிறதும் சுபாவத்துக்கு மேலானதுமான தேவ உதவியே இரட்சிக்கும் பிரசாதமாம்.

"தேவரீர் தின்மையினின்று அவர்களைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்"—அரு. XVII. 15.

115. நாம் எந்த விண்ணப்பத்தினுல் பிதாவிடத்திலிருந்து இரட்சிக்கும் பிரசாதத்தைக் கேட்கிறோம்?

"தின்மையிலே நின்று எங்களை இரட்சியும்" என்ற விண்ணப்பத்தினுற் கேட்கிறோம்.

116. தின்மை ஆவது என்ன?

நமக்கு இருக்கவேண்டிய ஒரு நன்மை இல்லாமல் இருப்பதே தின்மையாம்.

117. தின்மை எத்தனை வகைப்படும்?

சுபாவத்தின்மை ஒழுக்கத்தின்மை என இருவகைப்படும்.

118. சுபாவத் தின்மைகள் எவை?

நமது ஆத்தும சரீர நன்மைகளுள் ஒன்றை இல்லாமல்பண்ணுகின்ற மூடத்தனம், சலிப்பு, குருடு, வருத்தம் முதலியனவாம்.

119. ஒழுக்கத் தின்மைகள் எவை?

நமது நல்நடத்தையைக் கெடுக்கிற பாவம், பாவப் பழக்கம் என்பவைகளாம்.

120. தின்மைகள் எப்படி வருகின்றன?

சுபாவத் தின்மைகள் சிருட்டிகளின் குறைபாட்டினுலும், ஒழுக்கத் தின்மைகள் மனுஷருடைய சுயாதீனத்தினுலும் வருகின்றன.

121. பிதாவானவர் இவைகள் வர உத்தரவு கொடுக்கிறாரா?

ஆம். சிருட்டிகளை அளவுள்ள நன்மைத்தனத்துடன் படைத்தபோதும், மனுஷரை சுயாதீனத்துடன் படைத்தபோதும் இவைகள் வர உத்தரவுகொடுத்தார்.

122. பிதாவானவர் மனுஷருடைய சுயாதீனத்தில் தங்காத சுபாவத் தின்மைகளையாகுதல் தடுக்கவில்லையா?

அவர் நமது ஆதிப்பிதாமாதாவைப் பாக்கியமான அந்தஸ்திலே உண்டுபண்ணும்பொழுது, ஒரு சுபாவத்துக்கு மேலான வரத்தால் இத்தின்மைகள் வாராமற்பண்ணினுர். ஆனுல் அவர்கள் விலக்கப்பட்ட கனியைத் தின்றதினுல் இந்த வரம் மனுக்குலத்துக்கு இல்லாமற் போயிற்று.

123. பிதாவானவர் இத்தின்மைகளை இப்போது ஏன் நமக்கு வரவிடுகிறுர்?

நமது பாவத்துக்குத் தண்டனையாகவும், நம்மை மனந்திருப்பவும், நாம் உலகத்தை வெறுத்து தமது நேசத்தில் வளரும்படியாகவும், நம்மைப் பரிசோதித்துத் தமக்குப் பாத்திரவான்களெனக் கண்டுபிடிக்கவுமே இவைகளை வரவிடுகிறுர்.

"அற்ப கஸ்தியடைந்தபின் அவர்கள் அடையும் சம்பாவனையோ பெரிதானதாயிருக்கும்; ஏனென்றுல் சர்வேசுரன் அவர்களைப் பரிட்சித்துப் பாத்திரவான்களாகக் கண்டார். பொன் உலையிற் பரிசோதிக்கப்படுமாப்போல அவர்களைப் பரிசோதித்தார்"—ஞாஞ. III. 5—6.

124. ஆகையால் பிதாவான்வர் தின்மையிலிருந்து நன்மை வரப்பண்ணுகிருரா?

ஆம். பாவத்திலிருந்துதானும் ஆச்சரியமான நன்மையை வரப்பண்ணுகிருர். உதாரணமாக ஆதாமினுடைய பாவத்திலிருந்து மிகவும அரிய மீட்பர் ஒருவரை வரப்பண்ணினுர்.

"சர்வேசுரனைச் சிநேகிக்கிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக உதவுகிறதென்று அறிந்திருக்கிறோம்"—உரோ. VIII. 28.

125. நாம் நன்மை வரும்படி தின்மை செய்யலாமோ?

இல்லை. நன்மை வரும்படி ஒழுக்கத் தின்மையை, அதாவது பாவத்தை, நாம் ஒருபோதும் செய்யப்படாது.

"நன்மை வரும்படி தின்மை செய்யாமலேன்? இப்படியும் நாங்கள் போதிக்கிறதாகச் சிலர் எங்களைத் தூஷணித்துச் சொல்லுகிறுர்களே"—உரோ. III. 8.

126. எல்லாத் தின்மைகளிலும் கேடான தின்மை எது?

நமது சரீரத்தையும் ஆத்துமத்தையும் நித்தியமாய் வாதிக்கிற நரக வேதனையே எல்லாத் தின்மைகளிலும் கேடான தின்மையாம்.

"சரீரத்தைக் கொல்லுகிறவர்களாயிருந்தும் ஆத்துமத்தைக் கொல்ல முடியாதவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆனுல் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் நரகத்திலே தண்டிக்க வல்லவருக்கே முக்கியமாய்ப் பயப்படுங்கள்"—மத். X. 28.

127. நரக வேதனையை ஏன் எல்லாத்திலும் கேடான தின்மை என்கிறோம்?

ஏனென்றுல் மற்றத் தின்மைகள் முடிவுள்ளவைகளுமன்றி அவைகளைச் சருவேசுரனுடைய நேசத்திற்காகப் பொறுதியோடு சகித்தால் நன்மைகளாய் மாறியும்விடும். ஆனுல் நரகவேதனையோ ஒருபோதும் முடியாததும் மாருததுமான பெருந் தின்மையாகவேயிருக்கும்.

"உன் வலது கண் உனக்கு இடறலாயிருந்தால், அதைப் பிடுங்கித் தூர எறிந்துபோடு. ஏனெனில் உன் உடல் முழுதும் நரகத்தில் தள்ளப்படுவதைவிட, உன் அவயவங்களில் ஒன்று சேதமாய்ப்போவது உனக்கு நலமாம்"—மத். V. 29.

128. நாம் ஏன் நரகத்தின்மையில் நின்று இரட்சிக்கப்படவேண்டும்?

ஏனெனில் நமது ஈடேற்றத்தின் கதியாகிய தேவ மகிமையை நாம் மோட்சத்தில் அடைந்து கொள்வதற்கு இத்தின்மை தடையாயிருக்கிறது.

129. நரகத்தின்மையில் நின்று நம்மை இரட்சிக்கும் பிரசாதத்தை எப்படிச் சொல்லுகிறோம்?

கடைப்பிடிப் பிரசாதம் என்று சொல்லுகிறோம்.

"முடிவு பரியந்தம் நிலைநிற்பவன் எவனே, அவனே இரட்சிக்கப்படுவான்"—மத். XXIV. 13.

130. கடைப்பிடிப் பிரசாதம் நமக்கு எப்போது கிடைக்கிறது?

மரணநேரத்திற் கிடைக்கிறது.

131. கடைப்பிடிப் பிரசாதத்தை எதிர்க்கிறவர்கள் யார்?

விசேஷமாய்த் தெரிந்த வேத சத்தியங்களை மறுக்கிறவர்களும், தங்களில் ஒழிய சருவேசுரனில் நம்பிக்கை வையாதவர்களும், சருவேசுரனினதும் ஆத்துமாக்களினதும் நன்மைக்கு விரோதமாய் இருக்கிறவர்களும், பாவத்தில் விடாப்பிடியாய் நிலை நிற்கிறவர்களுந்தான்.

---

## சத்திர சிகிச்சை நிபுணர்

யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரிக்குத் தேர்ச்சிபெற்ற ஒரு சத்திர சிகிச்சை வைத்தியரைச் சுகாதாரப் பகுதித் தலைவர் நியமித்திருப்பதாகத் தெரிகிறது. இந்நியமனம் ஆடி மாதம் 1-ம் திகதி முதல் அமுலுக்கு வந்திருக்கிறது. தற்காலிக சத்திர சிகிச்சை அதிகாரியாக இதுவரை கடமை பார்த்து வந்த டக்றர் ஏ. ஜி. மூத்ததம்பி களுத்துறைச் சுகாதார பயிற்சி நிலையத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறுர்.

# மாதோட்டத் தபால்

(நாட்டுத் தூதன்)

செந்நெல் செறிந்த பூமி—வடலங்காவில் வளம்பெற்று மிளிர்வதும் செந்நெற் களஞ்சியமெனத் திகழ்வதும் மாதோட்டமே என்பது சகலரும் நன்கறிந்த தொன்றுகும். இஃது பண்டைக்காலந்தொட்டே செந்நெற்செறிவில் சிறந்து விளங்குகின்றது. நமது சுதந்திர லங்காவின் நாற்றிசைகளிலும் நவீன முறைகளில் கமத்தொழில் விருத்தி அடைந்துவரும்இந்நாட்களில் இந்நாடுமட்டும் "பழைய கறுப்பனே கறுப்பன்" என்பதுபோல் பண்டைய முறையில் உணவுத்தொழிலை ஆற்றிவருவது வருந்தத்தக்கது. பலவித தொழில்களிலும் புதுப்புது முறைகள் புகுத்தப்பட்டுவரும் தற்காலத்தில் இப்பாகம்மட்டும் தன் பண்டைய முறையைக் கைவிடாது நடப்பதை எவருமே கவனியாது தம்கண்களை இறுக மூடிக்கொண்டிருப்பது மகா வருத்தத்துக்குரியதாகும்.

உணவு உற்பத்தி இயக்கம்—சென்ற யுத்த ஆரம்பகாலந்தொடக்கம் இங்கும் உணவு உற்பத்தி விருத்திக்காகப் பல உத்தியோகஸ்தர் தற்காலிகமாக அமர்த்தப்பட்டுத் தொண்டாற்றிவந்தமை குறிப்பிடற்பாலது. தற்போது அவர்கள்தொகை குறைக்கப்பட்டுள்ளது. அரசினர் எப்படித்தான் எடுபாடான முயற்சிகள் செய்தபோதிலும் இப்பகுதியில் உணவுஉற்புத்தி விருத்தியானது சிறந்தமுறையிலே விருத்தி அடைந்து வருவதாகக் கூறமுடியாது. மாரிகால ஆரம்பத்தில் பலவித விதைவகைகள் ஊர்களில் நடமாடுகின்றனவேயாயினும் அவற்றுள் பெரும்பாலானவை முளைகொள்ளமுடியாது பூமியினுள் மறைந்துபோகின்றன. இதற்குக் காரணம் விதைகள் உழுத்துப்போய் இருப்பதென்றே ஊரில் கதைத்துக்கொள்ளுகின்றுர்கள். காலத்திற்குக்காலம் உணவுவிருத்தி உபகரணங்களின் இடாப்புக்கள் தயாரிக்கப்பட்டு வந்தபோதிலும் நல்லபயன் எதுவும் கிடைத்திலது.

கட்டுக்கரைச் சிறுபோகம்—செந்நெல்செறிந்த பூமியாகிய இப்பாகத்தின் இரத்தாசயம்போல் இருப்பது கட்டுக்கரைத் தடாகமே என்பதில் சந்தேகமின்று. இது இல்லையேல் இந்நாடு, கணவனை இழந்த மனையாள்போல் நைந்து வருந்திக் கலங்கவேண்டியதே. இவ்வித பெருமை பொருந்திய தடாகத்தின் தற்போதைய கேவல நிலையை உய்த்துணர்ந்து, ஆவனசெய்ய முன்வருவார் ஒருவருமில்லையே. ஆண்டாண்டுதோறும் இதன் ஆழம் சேற்றுல் மேவப்பட்டுவருகின்றது. இங்ஙனம் இன்னும் நிகழ்ந்துகொண்டே வருமாயின் நீர்ப்பெருக்கும் குறையும். நீர்குறையின் சிறுபோக நெல்விளைவும் குறையும். இக்குறைகளைக் கூடிய கெதியில் நிவிர்த்திசெய்யாது மல்வத்தைஓயாவின் வரவை எதிர்நோக்கியிருப்பது "இலவுகாத்த கிளி"யை நிகர்த்ததாகும். சிங்களநாட்டுத் திட்டமெல்லாம் முடிவடைந்த பின்புதான் ஒருவேளை இந்த மல்வத்தை ஓயாத் திட்டமும் முடியும்போலிருக்கிறது.

சன்னுர்க்குளம்—இது புராதன பாரிய குளங்களுள் ஒன்றுகும். அழிவுற்றுச் சிதைவுற்றுப் பாரிய காட்டால் ஆட்சிகொள்ளப்பட்டுத் தேடுவாரற்றுக் கிடந்த இக்குளமானது விடத்தல் தீவுப்பகுதிவாசிகளின் வேண்டுகோளின்படி அரசினரால்மீண்டும் புதுப்பிக்கப்பட்டுப் பாவனைக்குத் திறந்து வைக்க வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது பூர்த்தியாகினுல் விடத்தல் தீவுப்பகுதியிலும் இருபோக வேளாண்மை செய்யலாமென உத்தேசிக்கப்படுகிறது.

சங்கங்கள்—கிராமச்சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக சேவாசங்கங்கள், ஐக்கியசங்கங்கள், சாதி—சமயவிருத்திச் சங்கங்கள் எனப் பலசங்கங்கள் இங்குதோன்றி இதோ மாதோட்டத்தை முன்னேற்றி வானம்மட்டாக உயர்த்திவைக்கிறேமெனக் கங்கணங்கட்டி வேலைசெய்யத் தொடங்கின. இப்போது இவற்றின் முயற்சியெல்லாம் மாட்டுவால்போல் கீழ்நோக்குகின்றன. அநேகர் தத்தம் தனிமதிப்புக்காக உத்தியோகங்களை வகித்தனரே அல்லாது உள்ளபடி நாட்டை முன்னேற்ற முன்வந்திலர். சனசமூக சேவாசங்கங்கள் ஆயாது ஒத்துழைக்கின் நலன் பெரிதும் உண்டாகுமென்றே தூதன் கருதுகின்றுன்.

மந்திரி பொன்னம்பலம்—கைத்தொழில்-மீன்பிடி மந்திரியாரான கௌரவ ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் சென்ற மாசம் 10, 11, 12-ம்திகதிகளில் இப்பகுதிக்குச் சமுகந்தந்தார். மன்னுர், தாழ்வுபாடு, பள்ளிமுனை, மாந்தை, விடத்தல்தீவு, வங்காலை ஆதியாம் இடங்களுக்கும் சில பிற ஊர்களுக்கும் சமுகங்கொடுத்து நன்கு வரவேற்கப்பட்டனர். மந்திரியாரும் மீன்பிடி-கைத்தொழில்விஷயமாய்ப் பேருதவி புரிவதாகப் பேசிப்போய் இருக்கின்றனர். திரு. சிற்றம்பலம் மந்திரியாரும்—தபால் தந்திப்போக்குவரத்து விஷயமாகத் தடல்புடலாக வேலை செய்துவருகின்றனர். ஆனுல் இங்கு கமத்தொழில் விருத்திச் சம்பந்தமாக உழைக்க ஒருமந்திரியையுங் காணேம்.

தீச்செயல் பெருக்கம்—ஓர்காலத்திலே எவ்விதமான தீச்செயல்களுமின்றிச் சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ்க்கைநடத்திவந்த மன்னுர்—மாதோட்டப்பகுதியானது தற்போது கொலை, களவு, பெண்சோரம் ஆதியாம் ஈனச் செய்கைகளிலே அதிகரித்து இலங்கையில் முதலிடம்வகுக்கும்போலிருக்கின்றது. அரசினர் பொலிஸ் ஸ்ரேஷன் ஸ்தாபித்து அவர்களுக்கு அவசரக் கார்ச்சேவையும் கொடுத்தபோதிலும் கொடூரச் செயல்கள் குறைந்தபாடாயில்லை. இவற்றின் ஆவேசம் தணியவேண்டுமாயின் அவசியமான இடங்களில் இன்னும்சில பொலிஸ் ஸ்ரேஷன்கள் திறக்கப்படவேண்டுமென்றும் அத்துடன் நாட்டுவாசிகளும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் தூதன் யோசனை கூறுகின்றுன்.

மடுவில் தண்ணீர்வசதி—சமீபத்தில் மந்திரி சிற்றம்பலம் அவர்கள் வங்காலைக்குச் சமுகங்கொடுத்தபோது நடைபெற்ற கூட்டத்தில் வங்காலைக் கிராமச்சங்கஅக்கிராசனர் திரு.யோண் மார்க் அவர்களும் திரு. A. P. தம்பையா அவர்களும் நன்கு வலியுறுத்தி நிகழ்த்திய சொற்பொழிவுகளின் பலனுய் மருதமடுத் திருப்பதியிலே தண்ணீர்வசதியைக் கூட்டுவதற்காக இன்னும் பத்துக் கிணறுகள் புதிதாக வெட்டுவிக்கப்பட இருக்கின்றன என்பதை அறிந்து தூதன் சந்தோஷங் கொள்ளுகின்றுன்.

கள்ளுத்தவறணை விற்பனவு—மன்னுர்ப்பகுதியிலுள்ள கள்ளுத்தவறணைகளின் ஏலவிற்பனவு(7-6-49) இல் மன்னுர்க்கச்சேரியில் நடைபெற்றது. அன்றையதினம் பட்டினம் மதுமயக்கிகள் நிறைந்த இடம்போலவே காட்சியளித்து நின்றது. மரியாதையை விரும்பும்பெரியோர் அமைதியாகவே காணப்பட்டனர். இம்முறை விற்பனவால் அரசினருக்குச் சுமார் ஐம்பதினுயிரம் ரூபா வரையில் இலாபமுண்டெனச் சொல்லப்படுகிறது. இத்தவறணைகள் எப்போது இந்நாட்டால் தொலையுமோ அப்போதே நாடு நன்மைபெற்று முன்னேறும்.—சுபம்.

---

## ரிக்கெற்றின்றிப் பிரயாணம்

மருதானை ஸ்டேஷனில் சென்ற 5-ந் திகதி காலை சடுதியாக நடத்திய ரிக்கெற் பரிசோதனையில் ரிக்கெற்றில்லாமல் பிரயாணம் செய்த 43 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்களில் 37 பேரிடமிருந்து இரட்டைச் சலாராக 122 ரூபா 40 சதம் வசூலிக்கப்பட்டது. பணம் கொடுக்க இயலாத அறுவர் பொலிசரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியம் சூசைதாசன் ஆகினான்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்” என்று சொன்னான். சீமாட்டியின் முகம் மலர்ந்தது. சிறுவனின் நேர்மையைப் புகழ்ந்து: “தம்பி! நீ நல்ல பிள்ளை. நீ ஓடிவந்ததற்கு, உபகாரமாக அந்த அரை ரூபாவையும் நீயே எடுத்துக்கொள்” என்றாள்.

சுப்பிரமணியத்துக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. அதை அடக்கிக் கொண்டு மீண்டும் கோவில் வாசலுக்குச் சென்றான். அப்போது தனது வயதுள்ள ஒரு சிறுவன் உள்ளே போவதைக் கண்டு, முன்பின் யோசியாமல் மெதுவாகத் தானும் கோவிலுக்குள் சென்றுவிட்டான்.

இதற்கு முன் ஒருநாளும், சுப்பிரமணியன் இப்பேர்ப்பட்ட கோவிலைப் பார்த்ததேயில்லை. கோவிலுக்குள் அவன் கண்ட ஒவ்வொருபொருளும் அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

முன்னே தான் பலமுறை போன இந்துசமயக் கோவில்களிலிருந்த சிலைகளெல்லாம் பார்வைக்குப் பெரும் அசங்கிதமாயும், விகார தோற்றமாயும், பயத்துக்குரியனவாயுமிருக்க, இங்கே இருக்கிற சுரூபங்கள் எல்லாம் அழகே அவதாரமாய், உயிருள்ளவைபோல் பத்தியை எழுப்புவனவாய் இருக்கக் கண்டு, தன் தாய் தகப்பன் ஏன் இப்படிப்பட்ட கோவிலுக்குக் கூட்டிவரவில்லை என்று ஆலோசிக்கலானான். சுப்பிரமணியம் இங்ஙனம் யோசித்துக்கொண்டு நிற்கையில், முன்பு போன பையன் அந்தக் குகையின் முன் போய் முழங்காலிலிருந்து தன் சிறு இரு கரங்களையும் குவித்துக்கொண்டு வாய்க்குள் என்னவோ சொன்னான். அவனைப் பார்ப்பது சுப்பிரமணியத்துக்குப் பரம ஆனந்தமாய் இருந்தது. பின்பு அந்தப் பையன் எழுந்து குகையுள் கிடத்தியிருந்த அழகான குழந்தைச் சுரூபத்தின் பாதங்களை முத்தி செய்து, பக்கத்தில் வைத்திருந்த தட்டம் ஒன்றில் ஏதோ காணிக்கை போட்டு, மீண்டும் முழங்காலிலிருந்து கையெடுத்துக் கும்பிட்டு எழுந்து வீட்டுக்குப் போனான். சுப்பிரமணியனுக்கோ இச்சிறுவன் செய்தது போல் தானும் செய்யவேண்டுமென்று ஒரு ஆசை பிறந்தது. அங்குமிங்கும் சுற்றிப்பார்த்தான். கோவிலுள் எவருமே இல்லாததைக் கண்டு, உடனே முழந்தாளில் வீழ்ந்து, கை குவித்து என்ன சொல்லுவதென்று யோசித்தான். செபம் என்பது இன்னதென்று அறியாத அச்சிறுவன் என்ன சொல்லுவான்? அவன் மனதுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அந்தக் குழந்தைச் சுரூபத்தைப் பார்த்தபடியே அசைவற்றிருந்தான். பிறகு எழுந்து குழந்தைச் சுரூபத்தண்டை போனான். அக் குழந்தையின் அழகைப் பார்த்துச் சொக்கிப்போனான். ஆசைமேலீட்டால் குழந்தைச் சுரூபத்தை முத்தமிட்டான். பக்கத்தில் காணிக்கைத் தட்டம் இருப்பதைப் பார்த்தான். கையில் இருந்தது, தான் சற்று முன் பெற்ற முழு அரை ரூபா மாத்திரமே. அதை அந்தத் தட்டத்திற் போடவேணுமென எண்ணினான். வேறொரு பக்கத்தில் இந்த அரை ரூபாவைக்கொண்டு அநேக பொருட்களை வாங்கிச் சாப்பிடலாமே என்று எண்ணம் உண்டாயிற்று. குழந்தைச் சுரூபத்தை மீண்டும் உற்றுப் பார்த்தான். கடைசியில் “எனக்கு இல்லாவிட்டாலும் பறுவாயில்லை. அந்தச் சின்னக் குழந்தைக்கு இந்த அரை ரூபாவையும் கொடுக்கப் போகிறேன்” என்றுசொல்லி அதைக் காணிக்கைத் தட்டத்தில் போட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பினான்.

அப்போது, களங்கமற்று நிர்மலமான அவன் இருதயம் சொல்லமுடியாத ஒருவித சந்தோஷத்தால் நிரம்பினது. அந்நாள்முதற்கொண்டு சுப்பிரமணியன் சாயந்தரவேளையில் அங்கு வந்து தேவாலயத்தைப் பார்த்தவண்ணமாய் நின்றுகொண்டிருப்பான். கோவிலின் பக்கத்திலிருப்பது அவன் மனதுக்கு ஆறுதலையும் ஆனந்தத்தையும் கொடுத்துக் கொண்டிருந்தது.

இப்படி தினமும் கோவிலைச் சுற்றிச் சுற்றி நிற்கும் சுப்பிரமணியனை—அக்கோவிலின் விசாரணைக் குருவர் கண்டு அவன் ஒரு திருட்டுப் பயல் என்று நினைத்து அவனை விரட்டப் பார்த்தார். களங்கமற்ற மனதையுடைய சுப்பிரமணியனோ கோவிலைப்பற்றியும், கோவிலிலிருக்கிற சுவாமியைப் பற்றியும் கேள்விகள் கேட்டு ‘ஏன்! நான் உங்கள் கோவிலுக்குள் வரக்கூடாதா? என்று சொன்னான் குருவானவர் அவனின் நல்மனதை மட்டிட்டு அவனைத் தன் அறைக்குக் கூட்டிச் சென்று, கடவுளைப்பற்றியும் இரட்சகரைப்பற்றியும் தெளிவாக அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். சுப்பிரமணியனும் பின்னேரத்தில் நாளாந்தம் சுவாமியாரைச் சந்தித்து வேத விஷயங்களையெல்லாம் நன்கு அறிந்து கொண்டிருந்தான்.

சில நாட்களுக்குப்பின் விசாரணைக் குருவானவர், அவ்வூர் வைத்தியசாலை ஒன்றினுள் செல்கையில், சுவாமி! சுவாமி! என்று என்று ஒரு சிறுவன் கூப்பிடுகிறதைக் கேட்டுச் சத்தம் வந்த பக்கமாய்ப் போக, தம்மைக் கூப்பிட்ட சிறுவன் சுப்பிரமணியனெனக் கண்டு அவன் பக்கலிற் சென்றார். மரணப்படுக்கையில் கிடந்த அவன் அருகில், துக்கவிகாரத்தில் அமிழ்ந்தியவர்களாய் அவன் பெற்றோர் நின்று கொண்டிருந்தனர். ‘உங்களைப் பார்க்க வேண்டுமென்று எங்கள் மகன் நேற்றெல்லாம் புலம்பிக் கொண்டிருந்தான். உங்கள் வேதத்தில் தான்சேர வேண்டுமென்கிறான். ஐயா! எப்படியாவது இவனை உங்கள் வேதத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்.” என்று அவனின் தாய் சொல்லி, ஐயோ! இவனைத் தவிர எங்களுக்கு வேறே பிள்ளை இல்லையே என்று அழ ஆரம்பித்தாள்.


மறுநாள் சுப்பிரமணியன் சூசைதாசன் என்ற பெயரோடு ஞானத் தீட்சைபெற்று, திவ்விய நாதரை உட்கொண்டு, சமாதானம் முகத்தில் வழிந்தோங்க, சந்தோஷத்தால் இருதயம் பொங்க, தன் பெற்றோரைக் கட்டி அரவணைத்து **“நான் போகும் இடத்துக்கு நீங்களும் வருவீர்களா?”** என்று சொல்லும் போதே உயிர்விட்டான்.

## ஆசிரியர் சின்னத்துரை

1938–1941 ஆண்டுகளில் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையிற் பயிற்சிபெற்று ஆசிரியர்களாக வெளிப்பட்டோர் பன்னிருவர். அதிபர் வண. L. A. சிங்கராயர், O. M. I. சுவாமியார் அவர்கள் இவ்வாசிரியர்களை ‘எனது முதல் மாணவர்’ என மகிழ்ச்சியோடு கூறுவார். சிறப்பாக இப்பன்னிரு ஆசிரியர்களுக்குள்ளும்-பொதுவர்க ஆசிரியர் சமுகத்திலேயே ஆசிரியர் சின்னத்துரைக்கு ஒரு விசேஷ மதிப்புண்டு. மாதகலைச்சேர்ந்த இவர் ஒரு சைவசமயத்தவர். காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை சங்கரப்பிள்ளை ஆசிரியரின் புதல்வர். கொஞ்சம் தழுதழுப்பான சரீரமும் சுருண்டமயிரும் வெற்றிலை பொதிந்த சிரித்தவாயுங் கொண்ட இவரைப்பார்த்த எவரும் சிரித்துக்கொண்டு அன்புடன் தான் பேசவேண்டும். இவரது கூட்டத்தில் எவரும் சிரித்துக்கொண்டேயன்றிக் கவலையோடிருந்ததை நான் காணவில்லை. 1938 ஆம் ஆண்டு ஆசிரியர் கலாசாலையிற் சேருமுன்பே இவருக்கு விவாகமாகியிருந்ததோடு ஒரு பிள்ளையும் இருந்தது. ஆசிரியர் கலாசாலையிற் பயிற்சிபெறும் காலத்தில் இவர் அடிக்கடி வீட்டுக்குப்போய்வர எண்ணுவதையும் அதிபர் சுவாமியாரிடம் உத்தரவுபெறப்படும் திண்டாட்டத்தையும் கண்டு ஏனைய வாலிப உடன் மாணவர் விழுந்து விழுந்து சிரிப்பர். இரண்டொரு வெள்ளிக்கிழமை சாயந்தரங்களில் அவசரம் வருப்படி வீட்டிலிருந்து தந்திமுதலாய் இவருக்கு வந்ததுண்டு. எனினும் படிப்பில்—விசேஷமாக கணிதம், படிப்பித்தலின் விதிமுறைகள், பயிற்சிப்படிப்பித்தல் முதலிய பாடங்களில் இவர் விசேஷ திறமையுடையவராயிருந்தார். குருபக்தி, அமைச்சல் முதலிய சன்மார்க்க விஷயங்களிலும் எந்தக் கத்தோலிக்க மாணவனுக்கும் இவர் இரண்டாவதாயிருக்கவில்லை. 1941 ஆம் ஆண்டில் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை மாணவர்களால நடிக்கப்பட்டுப் பெரும் புகழீட்டிய ‘கமலேசன்’ (Hamlet) என்னும் நாடகத்தில் ஆசிரியர் சின்னத்துரை கமலேசனின் சிற்றப்பனாகத்தோன்றி நடித்துவிட்ட நடிப்பை எவரும் மறக்கமுடியாது.

கலாசாலையிலிருந்து ஆசிரியராக வெளிப்பட்டு, கடந்துபோன 8 வருடங்களிலும் இவர் நெடுந்தீவு, சில்லாலை, மாதகல் கத்தோலிக்க பாடசாலைகளில் அரும்பணிபுரிந்திருக்கிறார். வாய்ச்சாதுரியமும் கம்பீரமும்நிறைந்த இவரது தடித்தகுரல் அவ்வூர் மாணவரின் காதுகளில் இன்னும் கல்விபுகட்டிக்கொண்டுதானிருக்குமென நம்புகிறேன். இவையெல்லாம் ஏன் எழுதினேன்? ஐயையோ! இந்த இளம் ஆசிரியர்திலகம் நிகழ்மதி மூன்றுந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தனது 35-வது பராயத்தில் உதிர்ந்து மயானத் தீயுள் மறைந்துவிட்டதே! ஈமச் சடங்குகள் ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் பன்னூற்றுக்கணக்கான இனசனர் சிநேகிதர் மத்தியில் நடந்தேறியது. மரணத்தின் காரணமென்னவென்று கேட்டபோது ‘ஒருபுதுவகையான இருதயநோய்’ என்றார் சிலர்; கசத்துக்கு முதற்படியான ‘புளுறிசி’ என்றார் சிலர். சாட்டில்லாமற் சாவுமுண்டோ? இவரது மனைவிக்கும் நாலு குழந்தைகளுக்கும் எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிப்பதன்றி வேறென்ன செய்வோம். இவருடைய ஆன்மா சாந்திபெறுக!

“சகபாடி”



பிறப்பு: **26-12-1924** இறப்பு: **14-7-1947**

## 2-ம் வருட மரண ஞாபகம்

நித்திய பிதாவே! யேசுக்கிறீஸ்துநாதருடைய விலைமதியாத திருஇரத்தத்தைப்பார்த்து மரித்த இம்மனுவேல் ஏபிரகாமின் ஆத்துமம நித்திய இளைப்பாற்றியின் ஆனந்தத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அனுக்கிரகம் செய்தருளும்.

இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும் உறவினர் சிநேகிதர்களும் இவரின் ஆன்ம சாந்திக்காக 1 பர. 1 பிரி. வேண்டிக்கொள்வார்களாக.

கவனிப்பு: 14-7-49 காலை 6 மணிக்கு கார்மேல் உத்தரியமாதா கோவிலில் ஓர் துக்கப் பூசை சொல்லப்படும்.

நேசபத்தாவையும் மகனையும்,
இழந்து பிரலாபிக்கும்
**மனைவி, தந்தை, தாய், சகோதரர்கள்**

## தேசீய ப்ாஷை

சுகாதார-ஸ்தல ஸ்தாபனமந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா இன்றுகாலை வெளியிட்டுள்ள ஓர்அரசாங்க அறிக்கையின் பிரகாரம், தமது சுகாதார பகுதிகள் யாவும் தேசீய பாஷையை உத்தியோகபாஷையாக்கிக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் கையாளும்படியும், தமது பகுதிகளுக்கு அனுப்பப்படும் சிங்கள கடிதங்களுக்கு சிங்களப் பாஷையிலும் தமிழ்ப்பாஷையில் அனுப்பப்படும் கடிதங்களுக்கு தமிழ்ப்பாஷையிலும் பதிலளிப்பதற்கும் கூடுதலான முயற்சிகளை கையாளவேண்டும் என்றும் கூறியுள்ளார். அரசாங்க அறிக்கைகள், சுற்று நிருபங்கள், மற்றும் காரியாலயத்திற்கான பத்திரங்களையும் தமிழ்—சிங்களம் ஆகிய பாஷைகளில் உபயோகிக்க வேண்டுமென்று மேலும் அவ்வறிக்கையில் திரு. பண்டாரநாயக்க கூறியுள்ளார். இதற்கான நடவடிக்கைகளை உடனடியாகக் கையாளும்படி தமது இலாகாவின் கீழுள்ளபகுதிகளுக்கு அவசர அறிக்கை ஒன்றும் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press. Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 7 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org